
www.padippakam.com

# தமிழ்நேயம்

இதழ் 4

நவம்பர் '98




## இந்த இதழில்

- காவிரி தேசிய இனச்சிக்கல்
- சாலையார் - ஆசான்
- அணுகுண்டு - அருந்ததிராய்
- தமிழர் கொற்றம் - குறிஞ்சி

படிப்பகம்

www.padippakam.com

# மடல்களிலிருந்து ...

ரஷ்யாவைப் பொறுத்தவரை எதையும் விற்கத் துணிந்திருக் கிறார்கள் என்ற அளவுக்கு "கூடங்குளம்" அணுமின்திட்டத்தைப் பார்ப்பது மிகவும் எளிமைப்படுத்தலாகத் தோன்றுகிறது.. தியாகுவின் முயற்சிக்காக வணங்குவதும், தினமணிக்கான பாராட்டும் மிக மிக அவசியமானவை. . . பாபர் மசூதித் தகர்ப்பு முதல் முஸ்லீம்களைப் பார்ப்பது மிகமிகக் குறுகிய அரசியல்வாதிகளின் பார்வை. . . சிறுபான்மையினரைப் பெரியார் முதல் அரசியல்வாதிகள் வரை ஒதுக்கி வைத்தது போல் நாம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. . இந்துத்துவ சக்திகளை நீங்கள் பார்க்கும் பார்வை எனக்கு முற்றிலும் உடன்பாடனதே. ஆனால் முஸ்லீம்கள் இவர்களைவிட எந்தவகையில் சிறந்தவர்கள் என்று கூற முடியுமா? முஸ்லீம்களின் சர்வதேச பயங்கரத்தை ஏன் நாம் பேசுவதில்லை?. . . இந்துத்துவ சக்திகளைப் பற்றி பேசும் அதே அளவு முஸ்லீம் மதவாதம் பற்றிப் பேச வேண்டிய அவசியம் இருக்கிறது. . . இந்தப் போலி அரசியல் மனித நேயத்தை சிறுபான்மை என்கிற அசிங்கமான போர்வையை நீக்கித்தான் ஆகவேண்டும்.

டாக்டர் இரா. இளங்கோவன், 21.9.98 மதுரை

என்னைப் பொறுத்த அளவில் தமிழ்த்தேசியம் என்பது ஈழத்தமிழனை, தாய்த் தமிழன்மேல் சுமத்தாதது. எந்தத் தேசியமும் மனித தேசியத்திற்கு உட்பட்டதுதான். இந்த வகையில் யாசர் அரபத், தனது மக்களைப் பலியிடாமலே யூதர்களின் ஆதிக்கத்தை வென்றெடுப்பது குறிப்பிடத்தக்கது. இலங்கைக் குழந்தைகளைப் பலியிட்டு, சொந்த சோதரர்களையே பலியிட்டு இயக்கம் நடத்துவது எனது பார்வையிலான தமிழ்த் தேசியத்திற்குப் புறம்பானது . . தமிழ்த் தேசியம் பார்ப்பனியக் கூறுகளை அது தமிழகத்தில் ஏற்படுத்தி வரும் கலாச்சார சீரழிவுகளை, அது போற்றும் இந்துமத ஆணவத்தை எதிர்த்து குரல் கொடுத்து, தமிழ் ஒற்றுமை, பண்பாடு போன்றவற்றை மக்களுக்கு உணர்த்தும் ஒன்றாக இருக்கவேண்டும். ஆனால் தமிழகத்தில், இந்து மதவாத விதைகளை நாற்றாங்காலாக்கி அவற்றை தமிழ் நிலத்தில் நட்டதுடன், தமிழர்களை தன் காலடியில் வீழ்த்திக் களிக்கும், ஜெயலலிதா உருவிலான பார்ப்பனீயத்தை, அந்த அம்மாவின் பெயரைச் சொல்லி விமர்சிக்காத எவரையும் நான் தமிழ் தேசியவாதியாக ஏற்றுக் கொள்ளமாட்டேன். இதே கருத்தைதான் பேராசிரியர் சாலையாரின் இரங்கல் கூட்டத்தில் தமிழறிஞர் மத்தியில் அவர்களின் இயலாமையை, பாராமுகத்தை எடுத்துரைத்தேன். தமிழ்த் தேசியம் என்பது வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்திற்கும், உள்நாட்டு வியாபாரத்திற்கும் ஒரு வாய்மொழி சாதனமாகவும், கட்டுரை விமானமாகவும் பலருக்கு ஆகிவிட்டது.

சு. சமுத்திரம், 12.10.98 சென்னை - 41

அய்யப்பணிக்கர் தொல்காப்பியத்தை வளர்த்து செழுமைப்படுத்த முன்வைக்கும் குறிப்புகள் புதிய வெளிச்சம் பாய்ச்சுகின்றன. தமிழ்நேயம் தமிழ் உலகின் சன்னல்களைத் திறந்து வைக்கின்றது . . . வீட்டில் வேறு மொழி பேசும் தென் இந்தியர்களை உள்வாங்குவது போல வட இந்தியர்களையும் உள்வாங்க முடியுமா? எவ்வளவுக்கு முடியும்? எப்படி யெல்லாம் முடியும்? இறுதியாகத் தமிழ்நேயம் உலகினர் யாவரையும் உள்வாங்கிக் கொள்வது எவ்வாறு? "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்றும் வரைபடத்தைக் கொண்டு நாம் புத்துலகைக் கட்டியாக வேண்டும். முதலில் தமிழ் உலகைக் கட்டியாக வேண்டும்.

பேரா. த. பழமலய், 27.10.98 விழுப்புரம் -1

படிப்பகம்

www.padippakam.com

1

# ஆசிரியர் உரை

மேற்கத்திய நாடுகளின் கடன் உதவியும் மூலதனக் குவிப்பும் நவீன அறிவியல் தொழில் நுட்பமும் இல்லாமல் இந்தியாவில் தொழில்வளம் பெருகமுடியாது. வறுமை ஒழியாது என்றெல்லாம் மேற்கத்திய அறிவாளிகளோடு சேர்ந்து இந்திய அறிவாளிகளும் அரசியல்வாதிகளும் முழங்கி வருகின்ற சூழலில் பேராசிரியர் அமார்த்திய சென் பொருளியலுக்கான நோபல் பரிசை இந்த ஆண்டு பெற்றுள்ளார் என்ற செய்தி நமக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. இவர் வங்காளி. தாகூரின் பாதிப்புக்குள்ளானவர். இந்தியாவில் ஏற்பட்ட வறுமையையும் பஞ்சங்களையும் பார்த்தவர். இப்பொழுது மேற்கத்தியரின் ஆதிக்கப் பொருளியலைப் பொய் என்று மெய்ப்பித்திருக்கிறார். உணவு உற்பத்தி பெருகவில்லை என்பதனால் பஞ்சம் வருவதில்லை. உச்ச அளவில் சுரண்டப்பட்ட நிலையில் மக்களின் வாங்கும் சக்தி அழிக்கப்படுவதால் தான் பஞ்சம் வருகிறதென்கிறார் அமார்த்திய சென். அவர் அழுத்தம் திருத்தமாகக் கண்டறிந்துள்ள இன்னொரு உண்மை நம் அரசியல் வாதிகளை நெஞ்சில் தாக்கவல்லது. வளர்ச்சி என்பதைத் தீர்மானிக்கும் அளவுகோல்கள் எவை என்பது குறித்து இவர் சொல்லுகிறார். அனைத்து மக்களுக்கும் தரமான கல்வி மற்றும் சுகாதாரம் உழைக்கும் மக்களுக்கு நிலம் என்ற முறையில் உண்மையான நிலச்சீர்திருத்தம், பெண்களுக்கு விடுதலை இவை உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதைச் செய்வதே மக்கள் நல அரசின் கடமை. அறிஞர் அமார்த்திய சென் ஒரு மெய்யியல் அறிஞரும் கூட. ஆடம்ஸ்மித், மார்க்ஸ் ஆகியவர்களின் பொருளியல் நெறியில் அமார்த்திய சென் கண்டறிந்த இவை எளிய உண்மைகள். அரசியல்வாதிகளின் முகத்தில் அறையும் இந்த உண்மையை இவர்கள் மிக விரைவில் மறந்துவிடுவார்கள் என்பது நம் விதி. பொருளியல் பேராசிரியர்கள் குறித்து நாம் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

காவிரி நமக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்தும் உடன்படிக்கையில் தான் நம் முதல்வர் கையெழுத்திட்டு வந்திருக்கிறார். அதிகாரம் இல்லாத ஆணைக்குழுவால் நமக்கு நன்மை ஏற்படாது. அரசியல்வாதியாகிய பிரதமரிடம் நடுநிலை நோக்கை எதிர்பார்ப்பது சாத்தியமில்லை. காவிரி வற்றிய பிறகு தமிழ் மக்களாகிய நமக்கு என்ன இருக்கிறது? தமிழ்நாட்டில் நிலங்களையும் வேலை வாய்ப்புகளையும் தன்மானத்தையும் இழந்த நிலையில் அகதிகளாய் இவர்கள் எங்கே சென்று தஞ்சம் புகமுடியும்? பவானி, நொய்யல், அமராவதி முதலிய ஆறுகளின் கரைகளில் அமைந்துள்ள நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளின் கழிவைச் சுமந்த நிலையில் காவிரி நடவம் ஆவதை எப்படி தடுக்க முடியும். ஆற்றில் மணல் இல்லை. குடிநீருக்கு

படிப்பகம்

www.padippakam.com



வாய்ப்பில்லை. நாடு என்னவாகும்? காவிரி இல்லாத நிலையில் எந்தத் தமிழ் இலக்கியம் பற்றி நாம் பேசப் போகிறோம்? தமிழ் மொழி பயிற்சி மொழி ஆகவில்லை. ஆட்சி மொழியாகவில்லை. இவற்றைக்கூட ஒரு நூற்றாண்டுக்குத் தள்ளி போடலாம். காவிரி இல்லாத நிலையில் தமிழ் மற்றும் தமிழ் வரலாறு அழிவது உறுதி. அதன்பிறகு எந்தத் தமிழை நாம் மீட்கப்போகிறோம். காவிரியைச் சாகவிட்டது தமிழினத்திற்குப் பெரும் துரோகம். அரசியல்வாதிகளிடம் தேசத்தை ஒப்படைத்தால் என்ன ஆகும் என்பதற்கு இதுவும் ஒரு ஆதாரம். கையெழுத்து ஆகாமல் இன்னும் ஒரு நூற்றாண்டு கூட நாம் காத்திருக்கலாம். இந்திய தேசியம் நமக்குத் தருவது மரணதண்டனை. தமிழுக்குத் தெய்வத்தன்மை இல்லை ஆகவே கோயில்களில் வழிபாட்டு மொழியாகும் தகுதி தமிழுக்கு இல்லை. இப்படி ஒரு வழக்கு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பார்ப்பனரைத் தவிர பிற சாதியினர் கோயில் கருவறைக்குள் நுழைந்தாலோ தெய்வச்சிலைகளைத் தொட்டாலோ கடவுள் தீட்டுப்பட்டு விடுவார். ஆகவே அர்ச்சகராகும் உரிமை பார்ப்பனரைத் தவிர பிற சாதியினர்க்கு / தமிழுக்கு இல்லை. ஆகமங்கள் விதித்துள்ள நெறியின்படி தான் வழிபாடு நடைபெற வேண்டும். குடமுழுக்குகள் நடைபெற வேண்டும். இந்த விதிக்கு நீதிமன்றம் அழுத்தம் தருமானால் தமிழகத்திலுள்ள சைவமடாதிபதிகள் தாம் சொந்தம் கொண்டாடும் கோயில்களுக்குள்ளும் நுழையமுடியாது. தமிழ் மக்களுக்கு எதிரான சக்திகள் தம்மை திரட்டிக் கொள்ளும் சூழலில்தான் இத்தகைய அழிவு வேலைகளில் சிலர் மனஉறுதியோடு ஈடுபட்டு உள்ளார்கள். தமிழை முன்னெடுத்து செல்வதில் தமிழக அரசின் தயக்கம் நமக்குப் புரிகிறது. தமிழ் மக்களின் திருமணம், புதுமனை புகுதல், ஈமச்சடங்கு முதலியவற்றிலும் வடமொழியாளரை வரவேற்கும் போக்கும் அதிகரிக்கிறது அரசியல்வாதிகள் தமிழர்களைக் கைவிட்ட நிலையில் மக்கள் அகதிகளாகிறார்கள். அரசியல் சட்டமோ, ஆகமங்களோ அரசியல்வாதிகளோ நம் மீது சுமத்தும் அடிமைத்தனம் நமக்கு உடன்பாடில்லை. போலித்தனமான சாத்திரங்களையும் சட்டங்களையும் புனிதம் என நம்மால் போற்ற முடியாது. தெய்வங்களை வணங்க இடைத்தரகர் தேவையில்லை. உருவங்களில் தெய்வமில்லை. நெஞ்சில் பதிந்துள்ள தெய்வ உணர்வோடு உரையாடுவதற்குத் தாய்மொழி தவிர வேறு ஊடகம் இல்லை. ஆதிக்கங்களை நம்மீது திணிக்கும் இந்தப் புனிதப் பிசாசுகளுக்கு எதிரான போராட்டம் என்பது தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ள ஒரு பெரும்வாய்ப்பு. மக்களின் விடுதலைக்கான பெரும் வாய்ப்பு. தமிழ்த்தேசிய அரசியலை முன் எடுத்துச் செல்வதற்கான இந்த வாய்ப்பில் ஒன்று திரள்வது நம் கடமை. தமிழ்ப் பகைவர்களை எதிர்த்து வெல்ல தமிழால் ஒன்றுபடுவோம்.

படிப்பகம்

www.padippakam.com



# கடவுளிடம் செல்லும் வழி

– சச்சிதானந்தன்
(தமிழில் சிற்பி)

கோயில்களுக்குப் போகாதீர்கள்
விக்கிரகங்களில் சிக்கிக் கொள்வீர்கள்

புத்தகங்களை நம்பாதீர்கள்
அவற்றின் சத்தியங்கள்
நமக்குப் பழசாகப் போய்விட்டன

புரோகிதர்களின் நட்பு வேண்டாம்
மத்தியஸ்தர்கள் விலை பேசுவார்கள்

கூட்டங்களில் அகப்படாதீர்கள்
அவை இம்சையின் வயல்கள்

உடலைப் பார்த்துக் கொள்ளுங்கள்
அது பிளந்து கொண்டிருக்கிறது

பயம் விரிவானது
நீதி உணர்வு வீரர்களாக்கும்

கர்வம் தடங்கல் அல்ல
அளவாகப் பயன்படுத்தினால்

காதல் ஒரு பாதை
மனிதர்களுக்குள் செல்லாது

வறுமை தடுக்காதீர்கள்
யாரும் அதைத் திணிக்காமல் இருந்தால்

காற்றைத் தடுக்காதீர்கள்
காரணம் கேட்காதீர்கள்

தியானம் செய்ய மலை வேண்டாம்
புல்லோடு சேர்ந்து அமர்ந்தால் போதும்

இலை, கிளி, மழை, ஆறு:
செவிசாய்த்து இவற்றைக் கவனமாய்க் கேள்

நிலாவுக்குக் கீழே உறங்கினாலும்
விழிப்பூட்டும் சூரியனை மறந்துவிடாதே

தனிமையைச் சபிக்காதே
தனித்திருப்பவன் மனதில் தான் உள்ளது
மிக அதிகமான உலகம்

மௌனம் தான் சங்கீதம்
வெறுமை தான் நிறைவு

படிப்பகம்

www.padippakam.com



# வழக்காட வருவார்கள்

- சேதுபதி

தமிழ் வழக்கை அயல் வழக்கு வெல்லும் போதில்
தனித்திருக்க எவர்மனம்தான் ஒப்பும் - நீதி
தக்கபடி உண்மைக்கே வாராநின்றால்
தமிழர்களின் வரலாறு என்ன ஆகும்?

எலும்பை ஒரு பெண்ணாக்கி முதலை உண்ட
இளமகனை மீட்டெடுத்து ஈசன் தன்னைக்
குடும்பத்துப் பிணக்கொழியத் தூதனுப்பிக்
கூடையிலே மண்ணெடுத்து அணைய டைக்கச்
சொன்னதுவும் செய்ததுவும் தமிழே என்று
சொன்னபல வரலாறும் பொய்யா சொல்வீர்?

கணிகண்ணன் போனதனால் பாய் சுருட்டிக்
கரிய நெடுந் திருமாலும் போக மீண்டும்
"மணிவண்ணா நீ இருக்க" என்ற சொல்லில்
மால்படுத்துக் கொண்டதெலாம் பொய்யா, ஐயா?

முன்னொருநாள் பொற்கிழியைத் தருமிக் காக
முதுபுலவன் கீரனொடு தர்க்கம் ஆடிச்
செந்தமிழைச் சிவன்காக்க முனைந்ததெல்லாம்
செல்லரித்த பழங்கதையா புரட்டா? பொய்யா?

ஆடிக்க களிக்கும்பே ரம்பலத்தான் கோவிலிலும்
அனந்ததிருச் சயனத்தான் அருள்வழங்கும் வாயிலிலும்
கூடித் தெண்டனிடும் கோவில்கள் அனைத்தினிலும்
ஓதித் துதிக்கதமிழ் அர்ச்சனையே வேண்டும் என

சூடிக்கொடுத்த தமிழ்ச் சுடர்க்க கொடியும் ஆழ்வாரும்
பாடிக் களிக்கதமிழ்ப் பண்ணிசைத்த நால்வர்களும்
தேடிக் கொடுத்தவரும் தினம்பாடும் அடியவரும்
கூடித் தமிழுக்காயக் குரல்கொடுக்க வருவார்கள்!

படிப்பகம்

www.padippakam.com

5

தமிழ்நேயம் : அகமும் புறமும்

# காவிரி - தமிழ்த் தேசிய இனச்சிக்கல்

24.10.98 அன்று காவிரிச் சிக்கல் குறித்து கோவையில் நடைபெற்ற கருத்தரங்கின் இறுதியில் பார்வையாளர்களின் கேள்விகளுக்குக் காவிரிக் காப்புக் குழுவின் தலைவர் திரு. பூ.அர. குப்புசாமி அவர்கள் தந்த பதில்கள் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**தமிழ் மக்களை மிரட்டும் கன்னட வெறியர்கள்**

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாகவே கர்நாடகத்தில் தமிழர்களுக்கு எதிரான வெறியைத் தூண்டி வளர்த்து வருகிறார்கள். பெரியார் ஒருமுறை பெங்களூரில் கன்னடத்தில் பேசமுயன்று, இயலாமல் தமிழில் பேசியபொழுது அவரை பேசவிடாமல் தடுத்தனர். எம்.எஸ். சுப்புலட்சுமி தமிழில் பாடியதை அவர்கள் கலவரம் செய்து நிறுத்தினர். தமிழர்களுக்கெதிராகச் செயல்படும் ஆறு போக்கிரிக் குழுக்களுக்குக் கறியும் சோறும் தருபவர்கள் கர்நாடகத்தில் வந்து குடியேறித் தொழில் செய்யும் மார்வாரிகளும் குஜராத்திகளும் ஆவர். தமிழர்களுக் கெதிராகத் தூண்டப்பட்ட வெறி காவிரிச் சிக்கலில் மறுவடிவம் பெற்றுள்ளது. கன்னட மக்களின் வாக்கு வங்கியை நம்பித்தான் அங்குள்ள எல்லா அரசியல் கட்சிகளும் காவிரிச் சிக்கலில் ஒருமுகமாகச் செயல்படுகின்றன. தனிப்பட்ட முறையில் பேசும்போது நமது நியாயத்தை ஒப்புக் கொள்ளும் சில தலைவர்கள் வேறு வழியின்றி அங்கு தூண்டப்பட்டுள்ள வெறியோடு ஒத்துத்தான் போகமுடியும். இப்பொழுது உள்ள நிலையில் வெறியால் தூண்டப்பட்ட கன்னட மக்களுக்குப் பின்னால் ஓடுவதைத் தவிர அரசியல் கட்சிகளால் வேறு எதுவும் செய்ய முடியாது.

காவிரிச் சிக்கல் என்பதைத் தஞ்சை விவசாயிகளின் பிரச்சனை என்று தான் முதல்வர் சொல்லுகிறார். தமிழகத்தின் பிரச்சனை என்று அவர் ஒருமுறை கூடச் சொன்னதில்லை. தமிழகத்தில் பதினாறு மாவட்டங்களில் காவிரி பாய்ந்து கடலில் கலக்கிறது. காவிரி என்பது தமிழகத்தின் தேசியச் சிக்கல். அதாவது தமிழ்த் தேசிய இனச்சிக்கல் என்றுதான் ஒன்றுதிரட்ட வேண்டும். காவிரியில் எண்பதுக்குப் பிறகு நீர்வரத்து மிகவும் குறைந்துவிட்டது. தொன்னூறில் தஞ்சையில் பஞ்சம் ஏற்பட்டது. இப்பொழுதே எட்டு லட்சம் ஏக்கரில் சாகுபடி இல்லை. ஆண்டு தோறும் தென் மாவட்டங்களிலிருந்து 12 இலட்சம் விவசாயக் கூலிகள் தஞ்சைக்குப் பிழைக்க வருகிறார்கள். திருப்பூரில் 1½ இலட்சம் கரூரில் 20 ஆயிரம் பேர் மலேசியாவுக்கு பிழைக்கச் சென்றவர்களும் தென்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே! காவிரி இல்லையென்றால் தமிழகத்தில் பெரும் பஞ்சம் வரும். அப்புறம் போராட்டங்கள் வெடிக்கும் தமிழ்நாடு தனியே பிரிந்தால் தான் தீர்வு கிடைக்குமென்று இப்பொழுது சில விவசாய சங்கத் தலைவர்களே பேச ஆரம்பித்துள்ளனர். அப்புறம் ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தச் சிக்கலை எடுத்துக் கொண்டுப் போய்தான் தீர்க்க வேண்டிவரும்.

**காவிரி - நிலக்கிழார்களின் பிரச்சனையா?**

நதிநீர்ப் பிரச்சனை என்பதை நிலக்கிழாரியத்தின் தொடர்ச்சி என்று சில நண்பர்கள் கருதுகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டுமா நிலக்கிழார்கள் இருக்கிறார்கள்? கர்நாடகத்திலும் இருக்கிறார்கள். அவர்களும் தான் தங்களுக்குள் முரண்பட்டும்

படிப்பகம்

www.padippakam.com



இருக்கிறார்கள். அங்கும் தமக்குள் முரண்படும் அரசியல் கட்சிகள் இருக்கின்றன. லிங்காயத்துகள் தனிநாடு கேட்கிறார்கள். கர்நாடகத்தில் இருந்து பிரிந்து செல்ல குடகு மக்கள் போராடுகிறார்கள். ஆனால் காவிரிச் சிக்கலில் அனைவரும் ஒரே குரலில் பேசுகிறார்கள். ஆந்திராவிலும் இப்படித்தான். அலமாட்டிச் சிக்கல் என்றவுடன் எல்லா கட்சிகளும் ஒரே குரலில் பேசுகிறார்கள். இத்தகைய ஒற்றுமை தமிழகத்தில் இல்லை. தமிழ் நம் மக்களை ஒன்றுபடுத்தவில்லை. ஒவ்வொரு கட்சிக்குள்ளும் தொடர்ந்து பிளவுகள்.சிறுசிறு குழுக்களும் தொடர்ந்து பிளவுபடுகின்றன. சாதிச் சங்கங்களுக்குள்ளும் பிளவுகள், தமிழை முன்நிறுத்தும் அமைப்புகளுக் குள்ளும் பிளவுகள். இந்த நிலையில் உச்சநீதி மன்றத்தில் முன்வைப்பதற்காக மத்திய அரசு முன்பு தயாரித்த திட்டம் தான் சரியான திட்டம் என்று சொல்லி வந்த முதல்வர், சில தனிப்பட்ட காரணங்களுக்காகப் படேல் முன்வைத்த திட்டத்தில் கையெழுத்து போட்டு வந்திருக்கிறார். தமிழகத்து விவசாயிகளின் நலன்களைத் தான் கவனித்து கொள்வதாகவும் கர்நாடக விவசாயிகளின் நலன்களைக் கலைஞர் கவனித்து கொள்ள வேண்டுமென்றும் அவர் பசப்பு வார்த்தை பேசுகிறார். பெங்களூரில் திருவள்ளுவர் சிலைக்கு முக்காடிட்டு ஒன்பது ஆண்டுகள் ஆகிறது.சென்னையில் கன்னடக் கவிஞர் சர்வக்நாவுக்குச் சிலை அமைக்க பீடம் அமைத்துவிட்டார்கள். செலவு 25 இலட்சம். சில ஆண்டுகளுக்கு முன்பு கர்நாடகத்திலிருந்து நிலங்களைப் பறித்து அடித்து துரத்தப்பட்ட மக்களின் நிலங்கள் மற்றும் உடைமைகள் குறித்து பேச்சு எதுவுமில்லை.

**நதிநீர் சட்டப்படி நம் உரிமை**

இந்தியாவில் பிற சட்டங்கள் எப்படி இருந்தாலும் நதிநீர் பிரச்சனை குறித்த சட்டம் மிகத் தெளிவாக இருக்கிறது. மாநிலங்களுக்கு இடையில் எழும் பிரச்சனை மத்திய அரசியலின் பட்டியலில் இடம் பெறுகிறது தமிழகத்திற்கும் கர்நாடகத்திற்கும் இடையிலான காவிரிச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இந்திய அரசியல் சட்டப்படி அமைந்திருக்கிற நடுவர் நீதிமன்றம் தான் உச்சநீதி மன்றம். இதன் தீர்ப்பு இறுதியானது. இதற்கு மேல் முறையீடு இல்லை. இதில் உச்சநீதி மன்றம் தலையிட முடியாது. நடுவர் மன்றத்தின் தீர்ப்பைத்தான் மத்திய அரசு செயல்படுத்தியாக வேண்டும். உச்சநீதிமன்றமும் வேறு வகையில் தலையிடவோ தீர்ப்பு வழங்கவோ முடியாது. இந்தச் சட்டத்தைச் செயல்படாமல் கர்நாடக அரசு பார்த்துக் கொள்வதில் தான் அதன் வெற்றி அடங்கியுள்ளது. நடுவர் நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கர்நாடக அரசு செயல்படுத்தாத நிலையில் அரசியல் சட்டம் 365 பிரிவின்படி கர்நாடகத்தில் சட்டத்தின் ஆட்சி செயல்படவில்லை என்று குடியரசுத் தலைவர் அறிவிக்க முடியும். அதன் பிறகு காவிரி அணைக்கட்டுகளை மையஅரசு தனது ஆளுகையின் கீழ் எடுத்துக் கொள்ள இயலும். இதற்காகவும் 356 பிரிவை பயன்படுத்த முடியும். சட்டம் இவ்வளவு தெளிவாக அமைந்திருக்கிறது. நடுவர் மன்றத் தீர்ப்பின் படி 12 இலட்சம் ஏக்கருக்கு மேல் கர்நாடகம் காவிரி நீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்ய முடியாது. இப்பொழுது 16 இலட்சம் ஏக்கரில் அங்கு சாகுபடி செய்கிறார்கள். கலைஞரும் ஒப்புக்கொண்டு கையெழுத்து இட்டு வந்திருக்கிறார். 26 இலட்சம் ஏக்கருக்கு அவர்கள் திட்டம் வைத்திருக்கிறார்கள். இனி நம்மால் அதை தடுக்க முடியாது. இப்பொழுதே தஞ்சையில் 8 லட்சம் ஏக்கர் சாகுபடி குறைந்து விட்டது. கடலுக்கு இப்பொழுது காவிரித் தண்ணீர் போவதில்லை. 8/10 கி.மீக்கு முன்பே காவிரி காய்ந்துவிடுகிறது. பூம்புகாருக்கோ, காரைக்காலுக்கோ காவிரி நீர் போவதில்லை.

**205 டி.எம்.சி. தான் நமக்கு விதியா?**

205 டி.எம்.சி தான் நமக்கு உரிமை என்பது ஒரு கதை. 6 கோடி மக்களும்

படிப்பகம்

www.padippakam.com



இந்தப் பொய்யை நம்ப வைக்கப்பட்டுள்ளனர். காவிரியில் வரும் நீர் 680 டி.எம். சிக்கு மேல் 750 டி.எம்.சி. வரை கிடைக்கிறது. நமக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக 570 டி.எம்.சிக்கு மேல் வந்து கொண்டிருந்தது. 1924 ஒப்பந்தப்படி 575 டி.எம்.சி. தண்ணீருக்கு உரிமை உண்டு. இந்த உடன்படிக்கையை இங்கிருந்து ஆங்கிலேயன் செய்தான் என்று சிலர் கூறுவது அபத்தம். கர்நாடகத்திலும் அதிகாரம் செய்தவன் வெள்ளையன்தான். இப்படித் திட்டமிட்டு பொய்களை பரப்புகிறார்கள். கர்நாடகம் இப்படி ஆட்களை நமக்குள் இருந்து வைத்து பிரச்சாரம் செய்கிறது. தஞ்சையில் நாம் தண்ணீரை வீணாக்குகிறோம் என்பது இப்படிச் செய்யப்படும் ஒரு பரப்புரை. 150 டி.எம்.சி. கடலில் வீணாகிறது என்பதும் ஒரு பொய். மேல்மடைக்காரனுக்குத்தான் முதல் உரிமை என்பது இன்னொரு பொய். 1978 இல் சிவராஜ்படேலின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழு 484 டி.எம்.சி. தமிழ்நாட்டிற்கான உரிமை என்று அறிக்கை தந்தது. இந்த அறிக்கையை நான்கு மாநில முதல்வர்களும் ஏற்றுக் கொண்டனர். இப்பொழுது 205 டி.எம்.சி. தான் நமக்கு உரிமை என்று முதல்வர் உட்பட எல்லோரும் ஒப்புக் கொண்டது போல தெரிகிறது. இது உண்மையல்ல.

காவிரியில் நீர் இல்லை என்பது ஒரு பிரச்சனை. காவிரி மணல் கொள்ளை போகிறது என்பது இதனோடு இன்னொரு பிரச்சனை. 80 முதல் கொண்டு தண்ணீர் இல்லை என்பதால் மரங்கள் வளர்ந்து காவிரியின் பரப்பைக் குறைக்கின்றன. பெரிய பெரிய இயந்திரங்களை வைத்து நூற்றுக்கணக்கான லாரிகளில் மணலைக் கடத்துகிறார்கள் மணல் கொள்ளைக்காரர்கள். இவர்களது வருமானம் ஆண்டுக்கு 20,000 கோடி ரூபாய். ஆற்றில் மேலே ஒரு ஆறு. மணலுக்கடியில் இன்னொரு ஆறு ஓடுகிறது. மணல் கொள்ளையால் இந்த ஆறு காய்ந்துவிடும் இதனாலும் பல லட்சம் எக்கர் காய்ந்துவிடும். இந்தக் கொள்ளைக்காரர்கள் அரசியல்வாதிகளுக்குத் தருவது 800 கோடி. இறுதியில் சிலரால் மக்கள் தம் வாழ்வை இழக்கிறார்கள். காவிரி என்பது விவசாயிகளின் பிரச்சனை அல்ல. தமிழ் மக்களின் பிரச்சனை. தமிழ் தேசிய இனத்தின் பிரச்சனை.

### குடகை மிரட்ட முடியாது

இப்பொழுது பிரதமர் முடிவுக்காக நம் முதல்வர் விட்டு வந்திருக்கிறார். பிரதமருக்கு எத்தனையோ அரசியல் பிரச்சனைகள். கர்நாடகத்திலிருந்து தமிழ் மக்கள் துரத்தப்பட்ட பொழுது இவர் பெங்களூரில் இருந்தார். யார் பக்கத்தில் நியாயம் என்று தனக்குப் புரியவில்லை என்றார். கற்பழித்தவர், கற்பழிக்கப்பட்டவர் ஆகியவர்களுக் கிடையில் யார் பக்கத்தில் நியாயம் இருக்கிறது என்பது புரியவில்லை என்றார் வாஜ்பேயி. அதே சமயம் ரதயாத்திரை மேற்கொண்டு பெங்களூருக்கு வந்த அத்வானி, மார்வாரிகளிடமும், குஜராத்திகளிடமும் கோடி கோடியாய் வசூல் செய்து கொண்டிருந்தார். கர்நாடகத்தில் பாரதீய ஜனதாவை ஆட்சிக்கு கொண்டு வரவேண்டும் என்று முனைந்திருக்கிற பிரதமரிடம் எந்த நியாயத்தை நாம் எதிர்பார்க்க முடியும். இந்திராகாந்தியின் அரசியல் தேவையை 71 இல் கலைஞர் நிறைவேற்றித் தந்தார். இப்பொழுதும் அதைத்தான் செய்திருக்கிறார். பிரச்சனை முன்னுக்கு வரும் பொழுதெல்லாம் இரத்த ஆறு ஓடும் என்று பாரதீய ஜனதா கட்சியினரும் மிரட்டுகிறார்கள். குடகு நாட்டில் தான் காவிரி உற்பத்தி ஆகிறது. கர்நாடகத்தில் குடகு ராஜ்யம் இணைந்ததைத் தவறு என்று இப்பொழுது குடகு மக்கள் உணர்ந்திருக்கின்றனர். குடகு நாட்டில் காவிரியில் கட்டப்பட்டுள்ள எட்டு நீர் மின்சார திட்டங்களில் இருந்து குடகுக்கு மின்சாரம் இல்லை. குடகுக்கு நீர் இல்லை; தோட்டங்கள் காய்கின்றன. குடகைத் தனி நாடாக்க நாச்சப்பா தலைமையில்

படிப்பகம்

www.padippakam.com



மக்கள் திரண்டு வருகிறார்கள். அவர்கள் போர் மரபினர். ஒவ்வொரு வீட்டிலும் துப்பாக்கி வைத்திருக்கிறார்கள். வீரவாளை முன்வைத்துதான் திருமணம் செய்கிறார்கள். அவர்களைக் கர்நாடக அரசியல் கட்சியினர் மிரட்ட முடியாது. மான்டியாவிலோ ஹாசனிலோ வாழும் குடகுக்காரர்களுக்கு ஏதாவது நேர்ந்தால் குடகில் இரத்த ஆறு ஓடும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். 5000 பேர் நாச்சப்பா தலைமையில் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள் போராட்டம் நடத்த. தனிநாடு கேட்டு!

**தவறு செய்தவர் யார்? என்ன தவறு?**

கண்ணகி கோட்டம் தமிழ்நாட்டின் எல்லைக்குள் தான் இருக்கிறது எம்.ஜி.ஆர். இருந்த காலத்தில் இந்திரா காந்திக்குக் கடிதம் எழுதினார். ஜெயலலிதாவும் இது குறித்து பேசினார். கலைஞர் 'பூம்புகார்' திரைப்படம் எடுத்தார். இப்பொழுது கண்ணகி கோயில் குறித்து இவர்கள் யாரும் பேசுவதில்லை.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபொழுது காவிரிச் சிக்கலில் அவருக்குச் சோதனை வரவில்லை. ஒரு முறை குறுவைக்குத் தண்ணீர் விடவில்லை, என்றநிலை ஏற்பட்டபோது உண்ணாவிரதம் இருந்தார். அதனுடைய விளைவு என்னவென்றால் அதுவரை காவிரி என்ற பிரச்சனை ஒரு சிலருக்குத் தான் தெரிந்திருந்தது அம்மையார் உண்ணாவிரதம் இருந்த போதுதான் தமிழர்கள் இதைப் பற்றி தெரிந்து கொண்டார்கள். இது நமக்கு ஒரு ஆதாயம். காவிரிச் சிக்கலைத் தீர்ப்பதற்குக் கர்நாடகத்தோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென பிரதமர் வற்புறுத்தினார். அம்மையார் ஒப்புக் கொள்ளவில்லை. இந்திராகாந்தி கேட்டபொழுது வழக்கைத் திரும்பப் பெற்றார் கலைஞர். தேவகௌட ஆட்சியின் போது கலைஞர் எதுவும் செய்யவில்லை. அம்மையார் செய்தது ஒரே ஒரு தவறு 205 டி.எம்.சி என்றவுடன் அதையே வெற்றி வெற்றி என அவர் முழங்கினார். அம்மையாருக்கு விவரம் தெரியாது. நமக்கு 400 டி.எம்.சிக்குக் குறைவில்லாமல் கிட்ட முடியும். இந்த உரிமை நமக்கு இருக்கிறது. கலைஞர் செய்தது நியாயம் என எங்கு பார்த்தாலும் பிரச்சாரம். பல லட்சங்கள் செலவளித்துத் தொலைகாட்சிகளிலும் பத்திரிக்கைகளிலும் பிரச்சாரம் செய்கிறார்கள். வெற்றிவிழா கொண்டாடுவதற்குக் காவிரியலை கொள்ளைகாரர்கள் பணம் தருகிறார்கள். பல இலட்சங்களுக்கு நாம் எங்கு போவது? குறுவைக்கு எம்.ஜி.ஆர். தண்ணீர் கேட்டார். மாட்டுத்தீவனம் வேண்டுமென்றார்கள். 100 லாரிகளில் அனுப்பிவைத்தார். காவிரித் தண்ணீருக்குத் தீவனம் இதற்கு என்ன அர்த்தம். தண்ணீர் கர்நாடகத்திற்கு சொந்தம் என்று அர்த்தப்பட்டு விடுகிறது. இது எம்.ஜி.ஆர் செய்த தவறு. கலைஞரும் இதே தவற்றைச் செய்தார். மின்சாரம் கொடுத்து தண்ணீர் வாங்கினார்.

**கர்நாடகம் – தனிநாடு**

கர்நாடக அரசு ஒரு 'மாஸ்டர்பிளான்' தயாரித்து இருக்கிறது. 36 அணைக்கட்டுகள் கொண்டதாக அந்தத் திட்டம் அமைகிறது. சிவ சமுத்திர நீர் மின்சாரத் திட்டம் இதில் சேராது. மேகதாது அணைக்கட்டு திட்டமும் இதில் சேராது மாஸ்டர்பிளானில் உள்ள 36 அணைக்கட்டுகளில் 8 அணையை ஏற்கனவே முடித்துவிட்டார்கள். இதன் விளைவாக தமிழ்நாட்டில் 8 இலட்சம் ஏக்கருக்கு தண்ணீர் இல்லை என்று ஆகிவிட்டது. அவர்கள் 475 டி.எம்.சிக்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். அப்படியானால் நமக்கு 135 டி.எம்.சி மட்டும் கேரளாவுக்கு 75. நமக்கு என்ன மிஞ்சும்.

படிப்பகம்

www.padippakam.com



கிருஷ்ணராஜ் சாகரில் இருந்து தமிழ்நாட்டு எல்லைக்கு மேல் பெய்யும் நீரைத் தேக்க மேகதாது அணை. அதையும் கட்ட ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் கட்டுவதைக்கூட நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. காவிரி காயத்தான் போகிறது. 40 இலட்சம் மக்களுக்கு வாழ்க்கை இல்லை. இவ்வளவும் செய்தவர் யார்? நான் சொல்ல வேண்டியதில்லை. இப்பொழுது 26 லட்சம் ஏக்கர் சாகுபடிக்குக் கலைஞர் கையெழுத்து போட்டிருக்கிறார். கர்நாடகத்தின் இந்தத் திட்டங்களுக்கெல்லாம் மைய அரசின் நீர்வள ஆணைக்குழுவின் அனுமதியையோ, திட்டக்குழுவின் அனுமதியையோ கர்நாடகம் பெறவும் இல்லை. 20 வருடங்களாக கர்நாடகம் இப்படி செய்து வருகிறது. மையஅரசு பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது. தடுக்க முடியவில்லை. கர்நாடகம் ஒரு தனிநாடு போலத்தான் இயங்கி வருகிறது. நாம் வாயளவில் பேசுகிறோம். செயல்படுவதில்லை.

இடைக்கால திட்டத்தை மையஅரசு பதிலிதழில் வெளியிடக் கூடாது என்றார்கள். வெளியிட்டால் இரத்த ஆறு ஓடும் என்றார்கள். கர்நாடகத்திலுள்ள தமிழர்களை விரட்டியடித்தார்கள். உடைமைகளை பறித்தார்கள். பெண்களைக் கற்பழித்தார்கள். இவை பற்றியெல்லாம் ஆவணங்கள் உள்ளன. நம் தமிழின தலைவர்கள் என்ன செய்தார்கள்.

வரலாற்றில் எத்தனையோ விசித்திரங்கள் நடைபெறுகின்றன. ஒருவரைத் தலைவராக தேர்ந்தெடுத்துவிட்டால் அவருக்கு அதிகாரம் கிடைத்துவிடுகிறது. **எத்தனை காலம், எவற்றையெல்லாம் விட்டுக் கொடுத்திருக்கிறோம்**

1974 லிருந்து 90 வரை காவிரியில் நீர் குறைந்ததால் நமக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 8,000 கோடி. உச்சநீதிமன்றத்தில் இதற்காக வழக்குப் போட வேண்டுமென்று சொன்னார்கள். பிறகு அதைச் செய்யவில்லை. பொற்கோவிலில் இந்திய ராணுவம் நுழைந்ததற்காக சீக்கியர்கள் ரூ 1,000 கோடி இழப்பீடு கேட்கிறார்கள். கிழக்கு மாநிலங்களில் மத்திய அரசின் அதிகாரம் எதுவும் செல்லுபடியாவது இல்லை. தேவகௌடா 9,000 கோடி தருவேன் என்றார். இது ஒரு வகையில் லஞ்சம். பஞ்சாப் முதலமைச்சர் 15 நாள் ஆட்சி செய்தவர். தில்லிக்குத் தரவேண்டிய ரூ. 7,000 கோடியைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று கேட்டார். மத்திய அரசு தள்ளுபடி செய்தது. தேவகௌடா 42 வாரம் பிரதமராக இருந்தார். சட்ட விரோதமாக பலவற்றைச் செய்தார். அலமாட்டி அணையைக் கட்டு, நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார். 2000 கோடியை இதற்காகத் தந்தார். தமிழ் நாட்டிலிருந்து பெரியார் பெயரைச் சொல்லிக்கொண்டு போன பாராளுமன்ற உறுப்பினர்கள் நமக்காக எதைச் செய்தார்கள். சட்டத்தில் சூத்திரர் என்று இருக்கிறது. இதை மாற்ற சட்டவரைவு எழுதிக் கொடுத்தேன். இதை அவர்கள் செய்தார்களா? ஆந்திராவிலிருந்து போன ஒரு கட்சி திருமண சட்ட திருத்தம் ஒன்று கொண்டு வந்தது. நம் பிரதிநிதிகள் கை தூக்கவில்லை. சட்டத்திருத்தம் நிறைவேறவில்லை. இவர்களுக்கு அரசியல் தெரியவில்லை. வருமானத்திற்குரிய தொழிலாக அரசியலை இவர்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள். தமிழ் மக்களை ஏமாற்றுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தான் தமிழ்நாட்டைத் தொடர்ந்து ஆண்டு வருகிறார்கள். இந்த போக்கை அடிப்படையிலிருந்து நாம் சிந்திக்கவேண்டும். காவிரிக் காப்புக்காக மட்டுமல்ல ஜனநாயகக் காப்புக்காக, மக்கள் காப்புக்காக, தமிழ்த் தேசிய இன உரிமைக் காப்புக்காக எல்லோரும் இணைந்து சிந்திக்க வேண்டும். செயல்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# வாழ்வாங்கு வாழ்ந்த சாலையார்!

## கு.வெ.கி. ஆசான்

எத்தனையோ பேர் கற்ற அறிவாளிகளாக இருக்கிறார்கள். அவர்கள் அனைவருமாக இல்லாவிட்டாலும், பெரும்பாலான வர்களாவது மற்றவர்களின் நலவாழ்வை எண்ணி வாழ்வார்கள் எனில் சமுதாய முன்னேற்றமும் வளமும் என்றைக்கோ நிலை பெற்றிருக்கும். ஆனால், அத்தகைய நடப்பைக் கணமுடிவதில்லை. ஏதோ சில அறிஞர்களாவது பிறர் நலம் பேணுவதால்தான், மனித இனம் இந்த அளவிற்காவது மூச்சு விட்டுக் கொண்டிருக்க முடிகிறது. அவ்வாறு பொது நலம் பேணி, புதுக்கருத்தைச் சொன்ன சிலரில் முன்னிடம் வகித்தவர்தான் அண்மையில், 1998 அக் 4 இல் நம்மை விட்டுப் பிரிந்த சாலை **இளந்திரையன்** அவர்கள்.

நெல்லை மாவட்டம், சாலை நயினார் பள்ளிவாசல் என்னும் சிற்றூரில் இராமையா - அன்னலட்சுமி ஆகியோரின் மூன்றாம் மகவாக 1930 செப்டம்பர் 6இல் பிறந்து, மகாலிங்கமாக வளர்ந்தவர் சாலையாராகப் புகழ் பெற்றார். அவருக்குப் பொன்றாத் துணையாக அக-புற வாழ்வில் அமைந்தவர் **சாலினியார்** விருதுநகர், சங்கரலிங்கம் - சிவகாமியம்மாள் ஆகியோருக்கு 1934 மே 25இல் பிறந்த இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் கனகசவுந்தரி. கண்ணகியின் சீரிய பண்புகளைப் பாராட்டும் வகையில் சிலப்பதிகாரத்தில் வரும் வேட்டுவப் பெண் பாத்திரம் சாலினி. படித்த காலத்தில், கட்டுரை ஒன்று எழுதும்பொழுது அப்பெயரைத் தமது புனை பெயராகப் பயன்படுத்தியிருந்தார். சென்னை, மாநிலக் கல்லூரியில் தமிழ் "பி.ஏ. ஆனர்ஸ்" வகுப்பில் 1951 முதல் 1954 வரை பயின்றனர்; பழகினர். 1954இல் படிப்பை முடித்த பின், அதே ஆண்டு மணந்து கொண்டனர். பின்பு சாலை - சாலினியாகவே தமிழ் கூறும் நல் உலகிற்கு அறிமுகமாயினர்.

மாநிலக் கல்லூரியில் தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணியேற்ற சாலையார், தமது கட்டுரை, கவிதைகளை இதழ்களில் வெளியிட்டுப் பரந்த அளவிற்குத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகமாகத் தொடங்கினார். 1957இல் விளம்பரத் துறையில் பணியேற்று, தில்லி செல்வதற்கு முன், முதுநிலை இலக்கிய (எம்.லிட்) ஆய்வுப் பட்டம் பெற்றார். 1959இல் தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் படிப்பைத் தொடங்கிய போது, அதன் முதல் தமிழ் விரிவுரையாளரானார். அங்கு, ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு பல்வேறு துறைகளில் பட்டப் படிப்பில் பயின்ற தமிழ் மாணவர்களுக்கு, அவர்களின் தாய்மொழிப் படிப்பையும் தொடர வாய்ப்பு ஏற்படுத்தியவர் இவரே! தமிழில் முதுகலை (எம்.ஏ.) வகுப்புகள் தொடங்க முயற்சியெடுத்து வெற்றி கண்டார். இவ்வாறு தமிழுக்கு எனத் தொடங்கிய பணியைத் தம் இன உரிமைக்கும் விரிவு செய்தார்; பகுத்தறிவுப் பாதையையும் பொதுவுடைமை இலக்கையும் பரப்பி வாழ்ந்தார். இடையில் சாலையர் இருவரும் முனைவர் பட்டமும் பெற்றனர்.

சாலினியாரின் ஆர்வம் மிக்க துணையுடன் சாலையார் முன் முயற்சி எடுத்து உருவாக்கி, இன்று பெருமையுடன் செயல்பட்டு வரும் அமைப்புகள் பட்டியலிடத் தக்கவை: உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழ் ஆசிரியர் மன்றம், தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கம், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம். இத்தகைய பொது அமைப்புகள் மட்டுமன்றி, அவர் 1971இல் தொடங்கிய அறிவியக்கப் பேரவை, அவருடைய முழுமையான வழிகாட்டலில் இயங்கியது. அவ்வமைப்பும், 1975இல் தொடங்கிய, "அறிவியக்கம்" மாத இதழும் தரமான செய்திகளையும், பொதுமையும் புதுமையும் சுமந்த கருத்துக்களையும் பரப்பி முற்போக்கு இளைஞர்களை உருவாக்கின.

படிப்பகம்

www.padippakam.com



சாலை-சாலினி இணையர் 1985இல் தங்கள் பொறுப்பு களிலிருந்து விருப்ப ஓய்வு பெற்று தில்லியிலிருந்து சென்னை திரும்பினார். அத்தருணத்தில் சாலையார் பல்கலைக் கழகப் பேராசிரியராகவும், சாலினியார் தில்லி, திருவேங்கடவன் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றிக் கொண்டிருந்தனர். சென்னை திரும்பியது ஓய்வெடுக்கவன்று; ஓய்வையும் உல்லாசத்தையும் இவர்கள் நாடியதேயில்லை! ஏமாந்த தமிழர்கள் ஏற்றம் பெறவும், ஒடுக்கப்பட்ட மக்கள் உயர்வடையவும் தொடர்ந்து சிந்தனையை ஓட்டினர்; ஓடிஓடி உழைத்தனர். தமிழ்ப் பாதுகாப்புக் கூட்டணி, தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு, ஈழத்தமிழர் விடுதலை ஆதரவுக் கூட்டமைப்பு, ஈழத் தமிழர் ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றை அமைத்துச் சிதறிக்கிடந்த மக்களைச் செயற்பாட்டிற்கு ஒன்று திரட்டும் முயற்சியில் முன்நின்றனர்.

1971இல் தில்லியில் நடத்திய தமிழ்ப் பண்பாட்டுக் கண்காட்சியும், தமிழகத்தில் இவர்கள் ஏற்பாடு செய்த எழுத்துச் சீர்திருத்த மாநாடு - 1979, அறிவியக்க மாநாடு - 1980, விழிப்புணர்ச்சி மாநாடு - 1982, ஆசிரியர் பள்ளிகள் சீரமைப்பு மாநாடு - 1986, இந்தி-ஆங்கில ஆதிக்க ஒழிப்பு மாநாடு - 1987, தமிழ்த்தேசிய இனத்தின் வாழ்வுரிமை மாநாடு - 1987, முதலியவையும், புதிய கல்விக் கொள்கை மற்றும் ஈழத்திற்கு இந்தியப் படை சென்றது ஆகியவற்றை எதிர்த்துக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டமையும், சாலையாரின் இலட்சிய வேட்கை எடுத்த செயல்வடிவங்களாகும். 1990 ஜூன் 9இல் நடக்கவிருந்த தமிழர் தன்னுரிமை மாநாடு தடைசெய்யப் பட்டதை மீறிக் கைதான பெருமக்களில் சாலையாரும் ஒருவர். தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தில் அவரும் துணைவியாரும் காட்டிய ஈடுபாட்டை நாடறியும்; "களத்திலே கடிதங்கள்" எனும் அவர்களுடைய ஏடு அதற்குச் சான்றாகும்.

1962 இல் வெளியான "இளந்திரையன் கவிதைகள்" என்பதில் தொடங்கி, 1992 வரை, கவிதை கட்டுரை திறனாய்வு, குறுநூல், உரைவீச்சு எனும் வகையில் சாலையாரின் 50 ஏடுகள் வெளியாயின. அவற்றைப் படிப்போர் உள்ளங்களில் கருத்து விதைகள் பதியும்; உணர்வு நீர் பாயும்; அவருடைய எழுத்துக்கள் ஒளியும் சூடும் தருவனவாகும். வாழும் வகையைக் குறித்து தனக்கென ஒரு தெளிந்த பார்வையைச் சாலையார் பெற்றிருந்தார். மூளைத் திறனோ உடல் வலிவோ பெற்ற சாமர்த்தியசாலிகள் - கெட்டிக்காரர்கள் - சிலர், ஏதேனும் ஒரு வகையில் பணத்தைக் குவிப்பது, பட்டங்களைப் பெறுவது, பதவியைப் பற்றுவது, அவற்றின் மூலம் சொந்த வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வது எனும் தன்னலப் போக்கில் செயல்படுவதால், பெரும்பாலானவர்களாக இருக்கும் பாமர மக்களின் வாழ்க்கை தாழ்கிறது; துளிர்விட்டுத் தளைத்து வளராமல் தளர்கிறது; நலிந்து சிதைந்து நசுங்கிப் போகிறது. இத்தகு பெருங்கேட்டினைப் பற்றியும், நெறி முறையற்ற சுயநல வாழ்வைப் பற்றியும் கவலைப்படாத அந்தச் சிலர், "வாழத்தகுதி பெற்றது வாழும்" எனும் தத்துவத்தைக் கூறித் தங்களின் சமூக முரண் வாழ்முறையை நியாயப்படுத்துகிறார்கள். இந்தத் தத்துவ அடிப்படை கோணலானது எனச் சாலையார் கண்டிக்கிறார்: "அறிவுத் தளத்தில் மனிதனுக்கும் மற்ற உயிர்களுக்கும் உள்ள தராதரமும், ஆறாம் அறிவு உடைமையால், மற்றவற்றினின்று வேறுபட்டு, மனிதக் குலத்திற்கு மட்டுமே அமைந்த பொதுமை நல வாழ்க்கை நாட்டமும் தெளிவுபடுத்தப்பட்டால், மனிதர்கள் தாங்களாகவே நாணித்திருந்தி நிற்பார்கள். இந்த அடிப்படைக் கோணலை நிமிர்த்தாமல், எத்தனை தத்துவச் சுமைகளை ஏற்றினாலும் மனிதச் சமுதாயம் விலங்கு மற்றும் தாவரங்களின் தளத்திலிருந்து உயர மாட்டாது" என அவருடைய "மக்கள் நாயக மரபுகள்" எனும் ஏடு செப்புகிறது.

உடற்பயிற்சியை மட்டுமே ஓம்பி, கேளிக்கையை நாடி, உயர் எண்ணங்களைப்

படிப்பகம்

www.padippakam.com



புறந்தள்ளும் சமுதாயம் வீழ்ச்சியுறும் என்பது சாலையாரின் எச்சரிக்கை: வாழ்க்கை மனித் தத்துவங்கள் எதையும் இன்றி

நினைவுகளே ஏறி நின்றால்,
பாழ்க்குளத்துத் தாமரையாய் வயிற்றுவழி மனிதர் எல்லாம்
பட்டழிந்து போவார்கள்.

(நடை கொண்ட படை வேழம்)

வறுமையை ஓட்டி வளத்தை நாட்ட வேண்டும் எனும் உணர்வும் உயிர்த்துடிப்பும் அற்ற வாழ்வு வற்று வாழ்வே என்கிறார் :

"உயிர் இருக்கவேண்டும் - இன்றேல்
உதிர்ந்து போக வேண்டும்!
உயிர் இருந்தும் உணர்ச்சி யின்றி
ஒடுங்கு"றீர்கள், ஏனோ?
யாளிருக்கும் மண்ணில் - வளம்
என்றி ருப்ப தன்றி,
ஏனிருக்க வேண்டும் - பஞ்சம்?
என்றெ ழும்ப வேண்டும்!"

(நடை . . . . . வேழம்)

துயர்கண்டு இரங்கும் மனமும், துன்பத்தைத் துடைக்க வேண்டுமென்ற ஆர்வமும் உள்ளவர்கள், ஒடுங்கியோ ஒதுங்கியோ கிடக்கமாட்டார்கள்; வெடித்துக் கிளம்புவார்கள்; கொடுமையைத் தொலைக்கும் துணிவுடன் ஓய்வின்றிப் பணியேற்பார்கள்:

"சிறப்படைய வேண்டாமா சிறுத்தை யே - நீ
செல்லரித்த குகைக்குள்ளோ கிடந்து போவாய்?

விரிவாகக் கொடிவீசும் முட்செ டிக்குப்
பெரிதான கத்தரிக்கோல் போடா விட்டால்
அரிதான பூஞ்செடிகள் அமுங்கிப் போமே,
ஆளழகே, இதைஏன்நீ மறந்து போனாய்?

வெடிக்கும்வகை தெரியாத ஆம ணக்காய்
வீணாக நிற்பாயோ அட, என் தம்பீ?
கண்ணீர்கள் காணாத கண்ண னோ, நீ
மண்மீதில் தீங்குகளே பெருக்கும் பேரை
வாழவிட்டுக் கொண்டிருக்கும் கோழை யோநீ?

பொங்கிவரும் மலையூற்றே, புதுத் தடத்தில்
புதுநடையை, பொதுநடையை எட்டிப் போடு!"

(நடை . . . . . வேழம்)

பலமுனைத் தாக்குதல்களுக்கு ஆட்பட்டுள்ள தமிழர்கள், குன்றாத ஊக்கத்துடன், எதிர்ப்புகளை முறியடித்து முன்னேற வேண்டும் என்ற வேட்கையுடன் உழைத்தவர், சாலையார். பகைவருக்குப் பணியாத தமிழர், குனியாத மனிதர். ஈரம் நிறைந்த வீர நெஞ்சினர்; அறிவையும் உழைப்பையும் தம் இனத்திற்காகவே பயன்படுத்திய தன்நலமறுப்பாளர்!

யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன், என்பது பழமொழி, இருந்த காலத்தில் அவருடைய வாழ்க்கை, பொதுத் தொண்டர்களுக்குத் தோள்கொடுத்த துணையாய் இருந்தது; இறந்த பின்பு அவருடைய வரலாறு உணர்வூட்டும் ஊற்றாய் இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# அணுகுண்டும் நானும்

## அருந்ததிராய்

**தமிழில் : சிற்பி**

(God of Small Things) நாவலுக்குப் புக்கர் பரிசு பெற்ற கேரள எழுத்தாளர் அருந்ததி ராய் அண்மையில் இந்திய அணுகுண்டு வெடிப்புக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி இருக்கிறார். இவர் எழுதிய கட்டுரையின் சில பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன).

(வெளி நாட்டிலிருந்து) நான் இந்தியா திரும்பினேன். என் வீடு என்று நினைக்கின்ற, நினைத்த இடத்துக்கு, என்னவோ செத்துப் போனதுபோல் தோன்றியது - அது நான் அல்ல. என்னை விடவும் எல்லையற்ற மதிப்புடைய ஒன்றின் மரணம். கொஞ்ச நாட்களாக மரணப்படுக்கையில் இருந்து கடைசியில் மூச்சை நிறுத்திக் கொண்டது அது. இப்போது அதை எரித்துச் சாம்பலாக்கி முடித்தாயிற்று. காற்றில் அருவருப்பு மிக்க வாடை - சந்தேகத்துக்கு இடமில்லாமல் பாசிசத்தின் நெடி.

"நாட்டின் பெருமைப் பூரிப்பு" "புத்தெழுச்சியின் பாதை", "புகழ் மிகும் தருணம்" - இவையெல்லாம் அணுகுண்டு வெடிப்பின் போது, எழுதப்பட்ட பத்திரிகைத் தலைப்புக்கள். சிவசேனைத் தலைவர் தாக்கரே சொன்னார்: "நாம் ஒன்றும் அலிகள் அல்ல என்று நிரூபித்து விட்டோம்" (யார் அப்படிச் சொன்னார்களோ? நம்மில் பலர் பெண்கள். என்றாலும் அலிகளோடு அதை இணை சொல்ல முடியாதே) பத்திரிகைகளைப் படிக்கும் போது "நாம் வலிமையிலும் ஆண்மையிலும் மிக உயர்ந்தவர்களாக இருக்கிறோம்" (பாதுகாப்பு அமைச்சர் சொன்னது) என்ற கூற்று சந்தேகத்தை எழுப்புகிறது. இவர்கள் "வயாக்ரா" மாத்திரையைப் பற்றி (செய்திகளில் இரண்டாம் இடத்துக்குப் போட்டியிட்டது இது) பேசுகிறார்களா அல்லது அணுகுண்டைப் பற்றிப் பேசுகிறார்களா என்பது சந்தேகம்.

"இவை அணுகுண்டு சோதனைகள் அல்ல. தேசப் பற்றுக்கான சோதனைகள். . . " என்று திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது.

ஆணி அடித்து இக்கருத்துத் திரும்பத் திரும்பப் போதிக்கப் படுகிறது. இந்தியாவே அணுகுண்டு. அணுகுண்டு என்றால் இந்தியா. வெறும் இந்தியா அல்ல, இந்து இந்தியா. எச்சரிக்கையாக இருங்கள் இந்த அணுகுண்டு சோதனையை எதிர்ப்பது தேச விரோதம் மட்டும் அல்ல இந்து சமய எதிர்ப்பும் ஆகும். (நிச்சயமாகப் பாகிஸ்தானில் அணுகுண்டு இசுலாமிய மயமானது. அந்த அரசியலிலும் இதே விஞ்ஞானம் பொருந்தி வரும்!) அணுகுண்டை வைத்திருப்பதில் இப்படி ஒரு வியாக்கியானம். இதனை வைத்துக் கொண்டு அரசாங்கம் தன்

www.padippakam.com



எதிரிகளைப் பயமுறுத்தலாம்; தன் சொந்த மக்கள் மீதே போர் தொடுக்கலாம். அதாவது நம் மீது.

1975ல் அணு ஆயுதக் கடலில் ஒரு விரலை மட்டும் இந்தியா நனைத்துக் கொண்டபோது திருமதி இந்திராகாந்தி அவசர நிலைப் பிரகடனம் செய்தார். 1999ம் ஆண்டு நமக்கு என்ன கொண்டு வருமோ? தேச விரோத நடவடிக்கைகளைக் கண்காணிக்கத் தனி அமைப்புகள் ஏற்படுத்த வேண்டுமெனச் செய்திகள் வருகின்றன. தேசியக் கலாச்சாரத்துக்கு ஊறு விளைவிக்கும் கேபிள் தொலைக்காட்சி அமைப்புகளைத் தடைசெய்யச் சட்டத் திருத்தம் வரப்போகிறதாம். (இந்தியன் எக்ஸ்பிரஸ் - ஜுலை 3) ஓவியர்களும், எழுத்தாளர்களும், நடிகர்களும், பாடகர்களும் சிரமத்துக்கு ஆளாக்கப்படுகிறார்கள், பயமுறுத்தப்படுகிறார்கள் (சிலர் அடிபணிந்தும் விட்டார்கள்) அடியாட்களால் மட்டுமல்ல. அரசாங்கத்தின் கருவிகளாலும் பயமுறுத்தல் நீதிமன்றங்களிலும் தொடர்கிறது. வலை இணையங்களில் ஏற்கெனவே கடிதங்களும், கட்டுரைகளும் வெளிவரத் தொடங்கிவிட்டன. வல்லாண்மை மிக்க வாகை சூடி வலம் வரும் இந்துதேசம் வரும் என்ற நாஸ்டர்டாமின் சோதிடத்துக்கு அறிவார்ந்த விளக்கங்களோடு "பொங்கி எழும் இந்தியா தன் பழைய ஆக்கிரமிப்பாளர்களின் மீது பாய்ந்து இவர்களைச் சின்னா பின்னம் ஆக்கும். பயங்கரமான பழிக்குப் பழி வாங்கும் போராட்டம் (அது முசுலீம்களை முற்றிலும் அழிக்கும்) 1999ம் ஆண்டு ஏழாம் மாதத்தில் ஆரம்பமாகும் என்றெல்லாம் எழுதப்படுகிறது. இது ஏதோ ஒரு கிறுக்கனின் வேலையாக இருக்கலாம். அல்லது சில ரகசியக் கடவுள் காப்புக் குழுக்களின் வேலையாகவும் இருக்கலாம். ஆனால் அணுகுண்டைப் பெற்றிருப்பது இப்படிப்பட்ட சிந்தனைகளைச் சாத்தியமாக்கி இருக்கிறது.

இப்படி ஒரு கட்டுரை நான் எழுதப் போவதாகச் சொன்னபோது என் நண்பர்கள் எச்சரித்தார்கள்: "எழுது ஆனால் நீ பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள். உன் வரிகள் ஒழுங்காகக் கட்டப்பட்டிருக்கிறதா, உன் ஆவணங்கள் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்".

என் ஆவணங்கள் சரியாகத்தான் இருக்கின்றன. என் வரிகள் கட்டப்பட்டிருக்கின்றன. எனினும் இத்தகைய சூழலில் ஒருவர் பாதிக்கப்படாமல் இருப்பது எப்படி? ஒவ்வொருவருமே பாதிக்கப்படுவோம். விபத்துக்கள் நடக்கும். இதை உணர்ந்து கொள்வதில் தான் பாதுகாப்பு இருக்கின்றது. நான் இதனை எழுதும்போது முன்னுணர்வுகளால் நிரம்பி இருக்கிறேன். இந்த நாட்டில் நேசிக்கப்படுகிற எழுத்தாளராக இருப்பதன் பொருளை உணர்ந்திருக்கிறேன். (ஓரளவு வெறுக்கப்படுவதன் பொருளையும் கூட) சென்ற ஆண்டு தகவல் தொடர்பு சாதனங்களின் தேசியப் பெருமைக் கண்காட்சியில் நானும் ஒரு பொருளாய் இருந்தேன். என்னோடு கூடவே ஒரு அணு விஞ்ஞானியும், ஒரு சர்வதேச அழகு

www.padippakam.com



ராணியும் இருந்ததைப் பார்த்து நொந்து போனேன். தெருவில் ஒவ்வொரு முறையும் யாரேனும் ஒருவர் உற்சாகத்தோடு "நீங்கள் நாட்டுக்குப் பெருமை சேர்த்துவிட்டீர்கள்" என்று சொல்லும்போது, (என் பரிசை நினைத்து, என் புத்தகத்தைக் குறித்து அல்ல) நான் குழப்பம் அடைந்தேன். அப்போதும் அது எனக்கும் பயம் தந்தது. இப்போதும் அந்த எழுச்சியும், உணர்ச்சிப் பிரவாகமும் எவ்வளவு சீக்கிரத்தில் எனக்கு எதிராகப் போகும் என்று எண்ணி அஞ்சுகின்றேன். ஒருவேளை என்னுடைய நேரம் வந்திருக்கலாம். தேவைக் கோலமிடும் வெளிச்ச விளக்குகளை விட்டு நான் வெளியேறுகிறேன். நெஞ்சில்பட்டதைச் சொல்லி விடுகிறேன்.

இதோ சொல்கிறேன்:

என் மூளையில் திணிக்கப்பட்ட அணுகுண்டுக்கு எதிராக நான் கண்டனம் தெரிவிப்பது தேசவிரோதம் என்றால் நான் பிரிந்து போகிறேன். சுதந்திரமாக இயங்கிச் செல்லும் ஒரு குடியரசாக என்னை நானே பிரகடனப்படுத்திக் கொள்கிறேன். நான் பூமியின் குடிமகள். எனக்கு எல்லைகள் இல்லை. கொடி இல்லை. நான் ஒரு பெண். ஆனால் அலிகளுக்கு எதிரானவள் அல்ல. என் கொள்கைகள் எளியவை உலகில் நிலவும் எந்த அணு ஆயுதச் சோதனைத் தடைச் சட்டமானாலும், அணு ஆயுதப் பரவல் தடைச் சட்டமானாலும் நான் கையொப்பம் இடுவேன். குடியேற வருபவர்கள் என் தேசத்துக்கு வரலாம். என் கொடியை உருவாக்க உதவலாம்.

என் உலகம் செத்துவிட்டது. அதன் பரம சோகத்தை நான் எழுதுகிறேன்.

உண்மைதான் அந்த உலகத்தில் குறைகள் இருந்தன. அது வாழத் தவிக்கிற உலகமாக இருந்தது. அச்சமிக்க, காயம்பட்ட உலகமாக இருந்தது. ஈவு இரக்கமின்றி அந்த உலகத்தை நானே விமர்சித்தி ருக்கிறேன். அதற்குக் காரணம் அதை நான் நேசித்தேன் என்பதுதான். அது சாகடிக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. துண்டு துண்டாய்ப் பிளக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. மன்னியுங்கள் - உணர்ச்சி வசப்படுவது நிதானமல்ல என்பதை நானும் அறிவேன். ஆனால் ஒரு அநாதை நிலையில் நான் என்னதான் செய்யட்டும்?

மனித குலத்துக்கு அது ஒரு வாய்ப்பு என்பதால் நான் அதை நேசித்தேன். கடலுக்குமேல் நின்ற பாறை அது. இன்னொரு விதமாகவும் வாழலாம் என்று வற்புறுத்திச் சொன்ன பிரவாதமான ஒளியின் துணுக்கு அது. அது செயல்பட்டுக் கொண்டிருந்த சாத்தியமாக இருந்தது. ஒரு மெய்யான வாய்ப்பு. எல்லாம் இப்போது முடிந்தது. இந்தியாவின் அணுச்சோதனைகள் அவை நடத்தப்பட்ட விதம், அவற்றை எதிர் கொண்ட உற்சாகப் பூரிப்பு - இவைகளெல்லாம் மன்னிக்க முடியாதவை எனக்கு இவையெல்லாம் பயங்கரத்தின் அடையாளங்களாய் உள்ளன. கற்பனையின் அழிவு - சுதந்திரத்தின் அழிவு, சுதந்திரம் என்பதுதான் என்ன? விருப்பப்படி வாழும் வாய்ப்பு.

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய முரண்பாடுகள்

– சுதாகர்

இந்தியா இரு வேறுபட்ட உலகங்களை உள்ளடக்கி உள்ளது ஒரு உலகத்தில் உடல் எடையைக் குறைப்பது, தொந்தியைக் குறைப்பது, ஒல்லியாவது என்று மேட்டுக்குடியினர் மருந்தும், மாத்திரையும் தேடி அலைகின்றனர். மறு உலகத்தில் வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ள ஏதேனும் கிடைக்காதா என்று ஏங்கித் தவிக்கிற பல கோடி மக்களிருக்கின்றனர். இந்தியாவிலுள்ள உண்மை நிலவரங்களை நாளேடுகள் எடுத்தியம்ப ஆரம்பித்தால், மனசாட்சியுள்ள எவரும் நிம்மதியாக இருக்க முடியாது. கிராமப்புற மனிதர்கள் நாளேடுகளில் இடம் பெறுவதே இல்லை. அவர்களின் கதறல், கண்ணீர், வேண்டுகோள் யாவுமே பத்திரிகைகளுக்கு எட்டுவதில்லை. அனைத்தையும் துய்ப்பதையும், வீணாக்குவதையும் நாட்டின் மக்களிடம் கண்டு கொள்கிறோம்.

உலகிலேயே மிக அதிக அளவிற்கு உணவு உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றான இந்தியாவில் பாதிக்கும் மேற்பட்டோர் உண்ண உணவின்றி உள்ளனர். உலகிலேயே மிக அதிக நதிகளையுடைய இந்தியாவில் மக்கள் குடிநீருக்காய் பல கல் தொலைவு நடக்கின்றனர். எண்ணிறந்த மருந்துச் செடிகளை, மருத்துவ முறைகளைக் கொண்ட நாட்டில் நல்வாழ்வு பலருக்கு எட்டாக் கனியாகவிட்டது. இம்முரண்பாடுகள் ஏன்? எப்படி?

காலகந்தி மாவட்டம் வறட்சியின் பிடியில் சிக்குண்டிருப்பதாக நாளேடுகள் பொய் புளுகின. ஆனால், உண்மை என்னவென்றால் இந்தியாவிலேயே அதிகம் உணவை உற்பத்தி செய்வது காலகஸ்திப் பகுதியில்தான். 25% மட்டுமே அப்பகுதி மக்களுக்கு மீதி 75% உணவுப்பொருள் வணிகர்களது வட்டிக்காரர்களின் கைகளுக்குச் சென்று விடுகிறது. மத்தியப் பிரதேசத்தில் பந்தல்கண்ட் பகுதியில், திகாம்காரில் பட்டினிச் சாவுகள் பெருகின. அங்கு எதுவுமே விளைவதில்லை என்றுதான் நாளேடுகள் செய்தி வெளியிட்டன. ஆனால், ம.பியில் கோதுமை அதிகம் விளையும் மாவட்டங்களில் திகாம்காரும் ஒன்று.

வளர்ச்சி, முன்னேற்றம் என்னும் பெயரில் அறிமுகமானவை செல்வந்தர்களையே வளர்ச்சியடையச் செய்தன. நிலத்தை உழுவோருக்கு உதவவில்லை. இதை வளர்ச்சி என்பதைவிட வீக்கம் எனலாம், புற்றுநோய் எனலாம். புற்றுநோய் போன்று சில பகுதிகள், சில மனிதர்கள் வளர்வதை வளர்ச்சி என்று சொல்வது நம்மையே ஏமாற்றிக் கொள்வது.

படிப்பகம்

www.padippakam.com



உலகிலேயே நிலமற்ற விவசாயிகள் அதிகமிருப்பது நம்நாட்டில்தான். உலகின் மிகத் தரம்வாய்ந்த உயர்கல்வியைத் (ஐஐடி) தரும் வசதியுடைய இந்தியாவில்தான் 100 மில்லியன் குழந்தைகள் கல்வி கற்கும் வாய்ப்பும், உரிமையும் மறுக்கப்பட்ட நிலையிலுள்ளனர்.

வானுயரக் கட்டிடங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் நகரங்களின் நடுவில் உள்ளன. ஆனால், 30 மில்லியன் மக்களுக்கு வீடு என்பது வெறும் கனவு. வேலை வேண்டிப் பதிவு செய்தவர்கள் மட்டும் 40 மில்லியன். 1/2 மீட்டர் இடைவெளியில் வேலையில்லாதோரை வரிசையில் நிறுத்தி வைத்தால் 20,000 கி.மீ. நீளத்தில் நிற்பார்கள். இந்தியாவின் மொத்தக் கடற்கரையோடு ஒப்பிடும்போது மூன்று மடங்கு நீளமானது. நல்ல குடிநீரின்றி இருக்கும் மூன்றிலொரு மனிதன் இந்தியாவில் இருக்கிறான். பாதிக்குப் பாதி மக்கள் கல்வியறிவற்றோராயிருக்கின்றனர். தண்ணீர் மூலம் பரவும் நோயினால் இறக்கும் நால்வரில் ஒருவர் நம் நாட்டின் குடிமகன். உலகிலேயே கண்பார்வை பாதிப்பிற்குள்ளானோர் அதிகமிருப்பது இந்தியாவில்.

இந்தியாவிலுள்ள ஏழை மக்களின் 40% மக்கள் நிலமற்ற உழைப்பாளிகள். மற்றுமொரு 45% மக்கள் வறியநிலை விவசாயிகள். 7.5% பேர் கிராமப்புற கைவினைஞர்கள். ஏழைகளில் பெரும்பாலோர்க்கு நிலம் வேண்டும், நீர் வேண்டும், காடு வேண்டும். இவற்றை இம்மக்களுக்கு உறுதி செய்ய வேண்டிய அரசு, பணக்காரர்கள் பக்கம் சாய்ந்து கொண்டு, ஏழைகளை ஏழைகளுக்கு எதிராகவே திருப்பிவிடுகிறது. தங்களின் வாழ்வியல் சிக்கல்களுக்கான உண்மைக் காரணங்களை அறிந்து கொள்ள முடியாத ஏழைகள் சாதியவலையில் வீழ்கின்றனர்.

பெருமளவிற்கு நிலச்சீர்திருத்தம் செய்யாமல், கல்வி, மருத்துவம், வீடு, வேலை வாய்ப்பிற்காகப் போதிய நிதி ஒதுக்காமல் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் நிறை போவதில்லை. இந்தியாவின் இதயத்தில் விழுந்துவிட்ட ஓட்டைகளை ஊசி-நூல் கொண்டு அடைத்துவிட முடியாது. தனிநபர்களிடம் முடங்கிக் கிடக்கிற நீரையும், நிலத்தையும், காட்டையும், கனிம வளத்தையும் கைப்பற்றிப் பொதுமைப்படுத்தாமல் இந்தியா முன்னுக்கு வந்துவிட முடியாது.

இந்திய முரண்பாடு முற்றி வெடிக்கும் இந்நிலையில், நம்நாட்டின் அரசியல், அறிவியல், பொருளியல், சமூகவியல், கல்வி, பண்பாடு, ஒழுக்கம், பொழுதுபோக்கு – போன்ற அனைத்துத் துறைகளிலும் மதவெறி சார்ந்த மூடநம்பிக்கைகளே கோலோச்சுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



# நெருக்கடி களைய, நெருங்கி வருவோம்!

குறிஞ்சி

உலக வரலாற்றில் முன்னுதாரணம் இல்லாத கடும் நெருக்கடி இப்போது தோன்றியுள்ளது. இது அனைத்து நாடுகளையும் வேறுபாடில்லாமல் சீரழித்து வருகிறது. முதலாளித்துவம், கம்யூனிசம் - சோசலிசம் என்ற வகையினமானாலும், கருப்பர் - வெள்ளையர் - மங்கோலியர் என்ற வகையினமானாலும் அனைவரும் இந்நெருக்கடியின் கோரக் கரங்களில் சிக்கித் திக்குமுக்காடுகின்றனர். இதிலிருந்து மீள முடியுமா? என்ற அவநம்பிக்கையில், விடுதலை பற்றிய வேட்கையின்றி, நடைபிணங்களாக உறைந்து விடக்கின்றனர்.

இப்பொதுவான நெருக்கடி தவிர ஒவ்வொரு நாட்டிற்கும் உரித்தான தனித்தனிச் சிக்கல்கள், இந்நெருக்கடியின் தீவிரத்தை மென்மேலும் இறுக்குகின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரை இங்கு விவசாயமே முதன்மைத் தொழில். இதற்கு அடுத்த பெரும் தொழிலாக இருப்பது ஜவுளித் தொழில்! இவ்விரண்டு தொழில்களும் சீரழிவின் விளிம்பில் திணறிக்கொண்டிருக்கின்றன.

தன்விளைபொருள்களுக்கு விலை நிர்ணயிக்க முடியாத அவல நிலையில் விவசாயிகள் உள்ளனர். கட்டுபடியாகாத அளவுக்கு விவசாயம் தள்ளப்பட்டதால், தற்கொலையே தீர்வு என விவசாயிகள் செத்து வீழ்கின்றனர். நீராதாரங்களின் சுருக்கம் மற்றும் வறட்சி, விதை உட்பட அனைத்து இடுபொருள்களுக்கும் பிறரை எதிர்பார்த்திருக்கும் சார்பு நிலை, விவசாயிகளின் குறுகிய காலக் கடன் நீண்ட காலக்கடனாக நீட்டிக்கும் அவலம். நீண்டகாலக் கடன் இரத்து செய்யப்படாமல் அரசால் கெடுபிடிக்குள்ளாகும் கொடுமை, நிலச் சீர்திருத்தங்கள் முறையாக அமுல்படுத்தப்படாமை போன்ற பல்வேறு சுமைகள் விவசாயத்தையும் விவசாயிகளையும் உருத்தெரியாமல் சிதைத்து வருகின்றன.

விவசாயம்தான் இப்படியென்றால், ஜவுளித் தொழிலாவது ஒழுங்கு முறையாக இருக்கிறதா என்றால், அதன் நிலையும் கவலைக்கிடமாகவே உள்ளது. பருத்தி, நூல் போன்ற மூலப் பொருள்களுக்கே தட்டுப்பாடு, புதிய நவீன இயந்திரங்களால் தொழிலாளர்கள் விரட்டியடிக்கப்படும் கையறு நிலை. தற்கொலைப் போக்கிலான ஆரோக்கியமற்ற வணிகப் போட்டி போன்ற எதிர்மறைப் போக்குகள் மேலோங்கி நிற்கின்றன. இவை மட்டுமல்லாமல், மறு சீரமைப்பு, - தொழில்நுட்ப மேம்பாடு என்ற பெயரில் இதுவரைப் போராடிப் பெற்ற தொழிலாளர்களது உரிமைகள் திடுமெனப் பறிக்கப்படும் கொடுமை; முதலாளிகளின் பெருங்கடன்களை

படிப்பகம்

www.padippakam.com



இரத்து செய்து விட்டு, தொழிற்சாலைகளை அம்முதலாளிகள் விருப்பம்போல் எப்பொழுது வேண்டுமானாலும் இழுத்து மூடிக்கொள்ளலாம் என்பது போன்ற அரசால் வழங்கப்படும் அநியாயச் சலுகைகள்; இவற்றின் விளைவாக எதிர்காலமே மிகப்பெரிய கேள்விக் குறியாக விசுவரூபம் எடுத்து நிற்கும் அபாய நிலை தோன்றியுள்ளது.

பெரிய தொழில்கள் மட்டுமன்றி சிறிய தொழில்களும் வேகமாக நசிந்து வரும் நிலை தோன்றியுள்ளது.

தாராளமயமாதல் – தனியார்மயமாதல் – உலகமயமாதல் ஆகியவற்றின் விளைவாக பன்னாட்டு மூலதனம் இம்மண்ணில் தங்கு தடையின்றிப் பாய்ந்தோடி வருகிறது. ஆண்டுதோறும் இந்தியாவில் 15 வெளிநாட்டு வங்கிகளைத் திறந்து கொள்ளலாம் என அரசு கதவுகளை அகலத்திறந்து விட்டாயிற்று. குளிர்பானம் முதல் கோழித்தீவனம் வரை அனைத்திலும் பன்னாட்டு மூலதனத்தின் வெறியாட்டம் தனியார் மயமாக்கலின் விளைவாக தலித்துகட்கான வேலை வாய்ப்பு வெட்டப்படுகிறது. இப்படிப்பட்ட சூழலில், எதிர்ப்புக்குரல் கொடுக்க வேண்டிய விவசாய சங்கங்கள், தொழிற்சங்கங்கள் நிலை என்ன? எவ்விதப் போர்க்குணமுமின்றி, வெறும் நிறுவனங்களாக புதிய அதிகார மையங்களாக, வசூல் சுல்தான்களாக, சமரசத் தரகர்களாக இவை வீழ்ச்சியடைந்து விட்ட கேவலமான நிலைதான் இன்றைய நடப்பு! இதனால், முதலாளிகளின் லாபவேட்டை, தங்கு தடையின்றித் தொடர்கிறது. தொழிலாளிகளோ, தம் உழைப்பை எவ்வளவு குறைந்த விலைக்கும் விற்க ஆயத்தமாகிவிட்டார்கள். எவ்வித தொழிற்சங்க உரிமையுமின்றி ஒப்பந்தத் தொழிலாளிகளாகவும், பண்ணை அடிமைகளாகவும் உழைக்கும் மக்கள் ஒடுங்கிப்போகும் அவலம் தொடர்கிறது.

ஆயுள் காப்பீடு, தொலைத்தொடர்புத்துறை, வங்கித்துறை போன்ற இலாபமீட்டும் அரசுடைமைத் தொழில்களும் சிறிதுசிறிதாக தனியார் மயமாகிவருகின்றன. அரசுத் தொழிலகங்களின் மூலதனத்தைச் சிறிது சிறிதாக மலிவுவிலைக்கு விற்று, அதில் தனியார் மூலதனத்தைத் தந்திரமாக அதிகரிக்கும் போக்கு வளர்கிறது. தொழிலாளர்களின் பிராவிடன்ட் நிதியை இதுவரை வங்கிகளில் நீண்டகால இட்டு வைப்புத் தொகையாக வைத்திருந்த நிலை மாறி, தனியார் நிறுவனங்களில் முதலீடு செய்யத் தற்பொழுது அனுமதித்துவிட்ட கொடுமை! இதன் விளைவாக, கோடிக்கணக்கான உழைக்கும் மக்கள் வியர்வை சிந்தி சிறிதுசிறிதாகச் சேமித்த பெருந்தொகை முதலாளிகள் சட்டைப் பைக்குள் பதுங்கப்போகிறது. எறும்புகள் சேமித்த உணவை, யானை தின்று அழிக்கப்போகிறது.

இப்படிப்பட்ட மக்கள் விரோதப் போக்கால் எங்கு பார்த்தாலும்

படிப்பகம்

www.padippakam.com



வேலை இல்லாத் திண்டாட்டம், வறுமை, விலைவாசி ஏற்றம், பணமதிப்பு வீழ்ச்சி!

அரசியல், பொருளாதாரத் தளங்களைப் போல, பண்பாட்டுத் தளத்திலும் கடும் சிக்கல் பெருகிவருகிறது. திரைப்படம், தொலைக்காட்சி, பத்திரிக்கைகள் போன்ற செய்தி ஊடகங்கள், நுகர்விபக் கலாச்சாரத்தைத் தீனிபோட்டு வளர்க்கின்றன. மதவாதம், சாதீயம் போன்றவை இம்மண்ணின் சுயமான அடையாளங்களை அழித்து, புதிய முகமூடிகளை அணியுமாறு சிபார்சு செய்கின்றன. இந்நடிப்புச் சுதேசிகள், சூழலியல் - பெண்ணியம் போன்றவற்றின் முக்கியத்துவத்தை மறைத்து, அவற்றை அரங்கின் பின்வரிசைக்குத் தள்ளுகின்றனர். இந்தியா எனும் பெரும் பரப்பிலான பூகோள மார்க்கெட்டைக் காப்பாற்ற, தேசிய இனங்களின் உரிமை - பண்பாடு - தனித்தன்மை ஆகியவற்றை இவர்கள் கொடூரமாக நசுக்குகின்றனர். ஒரே நாடு - ஒரே மொழி - ஒரே பண்பாடு என்ற கூச்சலை, தேசபக்தி எனும் பெயரால் கட்டவிழ்த்து, தலித்துகளின் மீதான கொடுந்தாக்குதல்களை அதிகரித்து வருகின்றனர். சுயமற்ற, சுயமரியாதையற்ற நிழல்களாக மக்கள் கூட்டத்தை மாற்ற விரும்புகின்றனர்.

இத்தகைய அதிகார மையங்களை - நச்சுசக்திகளை அடையாளங் கண்டு கொள்வதோடு, எதிர்த்துப் போராடவும், ஒன்றிணையவும் வேண்டிய தேவையுள்ளது. இதற்கு நமக்கு தெளிவு - தொலைநோக்கு தேவை. இத்தெளிவை நாம் பெற, இப்பொழுது தோன்றியுள்ள இந்நெருக்கடியின் மூலகாரணம், அதன் பன்முகத்தாக்கம், இதிலிருந்து மீள்வதற்கான சாத்தியக்கூறு, விடுதலைக்கான பாதை ஆகியன பற்றி சிந்திக்கத் வேண்டியதும் விவாதிக்க வேண்டியதும் அவசர அவசியம் என்று கருதுகிறோம்.


**விஷ்ணுபுரம் கருத்தரங்கிற்கான கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.**

**விஜயா பதிப்பகம், இராசவீதி, கோவை 641 001**

**பெண் எழுத்தாளர்கள் - சிறுகதைப் போட்டி**
**இறுதி நாள் டிசம்பர் 15 - 2000 சொற்கள்**
**இரண்டு கதைகளுக்கு ரூ. 5,000 பரிசு**

**முகவரி**
**தமிழ்நேயம்**


படிப்பகம்

www.padippakam.com



# தெத்தூர் மலையடிவாரத்தில் ஒரு கம்யூன்

நரம்பு துடிக்கும் இளைஞர்களாய் இருந்த காலத்தில் அவர்களும் கனவு கண்டார்கள். சாதி மத பேதங்கள் நீங்க வேண்டும், வறுமை ஒழிய வேண்டும், ஆடம்பர மோகம் முற்றுப்பெற வேண்டும், குண்டுகளுக்குப் பதிலாய் பூச்செண்டுகள் வலம் வர வேண்டும், கிராமங்கள் நகரத்திற்கு இணையாய் எழுந்து நிற்க வேண்டும் - இப்படிப் பல கனவுகளை உள்ளடக்கிய சமூக மாற்றம் பெரிய கனவாய் அவர்களிடம் தோன்றியது. மூளையின் மூலமாக மற்றவர்கள் கனவு கண்டிருந்தபொழுது அவர்களது நெஞ்சங்களில் அக்கனவு கருத்தரித்தது. அவர்களையும் அடக்கியது தானே சமூகம்-அதனால் அவர்களை மாற்றிக் கொள்ள தீர்மானித்தார்கள். எதை இந்தச் சமூகத்திற்குச் சொல்ல விரும்பினார்களோ, அதை முதலில் அவர்கள் செய்வதென்று முடிவெடுத்தார்கள். சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள இடைவெளியில் உட்கார்ந்து கொண்டு சிலர் கண்ட கனவுகள் என்ன ஆயிற்று என்பது அவர்களுக்குத் தெரியும். சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற முதல் தீர்மானத்தை ஒருமனதாக எடுத்தார்கள். காலத்திற்கு இரையாக்கி விடாமல், கண்ட கனவை நனவாக்கிட சில அதிரடி காரியங்களில் இறங்கினார்கள்.

வேறு வேறு சமூக, பொருளாதார பின்னணியைக் கொண்ட அவர்கள் ஒரு குடும்பமாக, ஒரு சமூகமாக வாழும் வழியைக் கண்டுபிடித்தார்கள். கையிலிருந்த காசுகளை ஒரே தட்டில் போட்டார்கள். சிலர் கூடுதலாகவும், சிலர் குறைவாகவும் போட்டார்கள். போடாமல் இருந்தவர்களும் உண்டு. முதலீடு என்ற வகையில் அவர்கள் பங்காளிகள் இல்லை.

மதுரைக்கு இருபத்தைந்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தெத்தூர் கிராமத்தின் மலையடிவாரத்தில் தரிசாகக் கிடந்த நான்கு ஏக்கர் நிலத்தை வாங்கினார்கள். கற்களை பொறுக்கி நிலத்தைச் செம்மை செய்தார்கள். பஞ்சபூதங்களில் நீர் மட்டும் இல்லை. நண்பர்களிடம் வட்டி இல்லாத கடன் பெற்று ஆழ்குழாய் மோட்டார்கள். காந்திகிராமம் அறக்கட்டளையிலிருந்து கம்ப்ரஸ்ஸர் மோட்டார் வாங்குவதற்கும், நீர்த்தொட்டி கட்டுவதற்கும் காசு கொடுத்தார்கள். அரசு மின்சாரம் கொடுக்காததால், நட்ட பழக்கன்றுகளுக்கு கையால் அடித்தே நீர் வார்த்து வருகிறார்கள்.

மரங்களை அவர்கள் வளர்க்க, அவர்களை இரண்டு மாடுகள் வளர்த்து வருகின்றன. இரண்டும் சேர்த்து ஒரு நாளைக்கு பதினாறு லிட்டர் பால் தரும். அதில் எட்டு லிட்டர் காசு புண்ணாக்கு

படிப்பகம்

www.padippakam.com



வகையறாவுக்குப் போய்விடும். மீதி எட்டு லிட்டர் பணத்தில் நான்கு பேர்கள் வாழ்க்கை நடத்த வேண்டும். சர்வ சேவா சங்கம் கொடுத்து வரும் ஆயிரம் ரூபாய் மற்ற செலவுகளுக்குப் பயன்படும். "உற்பத்தி செய்பவனுக்கும் நுகர்வோருக்கும் இடையில் யாரும் இருக்கக்கூடாது – அந்தத் தரகர்களால் தான் எல்லாத் தகராறும்" என்பதால் அவர்களே பாலை எடுத்துக்கொண்டு போய் மதுரையில் விற்றுவிட்டு வருகிறார்கள்.

வசிக்க இரண்டுகுடிசைகள் – ஒன்று மாடுகளுக்கு, இரண்டாவது அவர்களுக்கு! கொட்டத்தை விட குடிலில் ஒரு வசதி கூடுதலாக உண்டு. நான்கு பக்கங்களிலிருந்தும் வரும் குளிர்காற்றைத் தடுக்க ஓலைச்சுவர். மற்றபடி படுக்கை அறை, வரவேற்பறை, அடுப்படி எல்லாமே அந்த ஒற்றைக் குடில்தான். காந்திகிராமத்திலிருந்து வந்திருந்த நலம் விரும்பிகள், வீடு மாதிரி இடத்தில் அல்ல; வீட்டிலேயே வசிக்க வேண்டும் என்று ஒரு வீடு கட்டிக்கொடுக்க முன்வந்தார்கள். வீட்டுவேலை முடியும் தருவாயில் உள்ளது. தரை, சுவர், சன்னல், கதவு எல்லாம் கொண்ட முழுமையான வீடு வரப்போகிற மகிழ்ச்சியில் அவர்களில் ஒருவரைத் திருமணம் செய்துகொண்ட பெண்மணி. அவள் பம்பாயில் பிறந்து வளர்ந்த இந்துப்பெண். மதம் தாண்டி கிருத்துவரின் கரம் பிடித்து தெத்தூர் மலையடிவாரத்திற்கு வந்திருக்கிறாள்.

முனைவர், பொறியாளர், வழக்கறிஞர் – என ஒரு படித்த பட்டாளமாக இருந்தாலும் சாணி அள்ளுவதிலிருந்து பால் கேன் தூக்கிப் போவது வரை எல்லாரும் எல்லா வேலைகளையும் இயல்பாகச் செய்கிறார்கள். ஒன்றாக உழைக்கிறார்கள், ஒன்றாகச் சமைக்கிறார்கள், ஒன்றாகச் சாப்பிடுகிறார்கள், ஒன்றாகச் சிரித்துப் பேசி உறங்குகிறார்கள். அவர்கள் இருக்கின்ற இடத்தை "கம்யூன்" என்று கிராம மக்கள் அடையாளம் காட்டுகிறார்கள்.

பொருளாதார ரீதியாக கம்யூனைச் சொந்தக்காலில் நிற்க வைப்பது அவர்களது முதல் கட்ட இலட்சியம். அது நிறைவேறுவதற்கு முன்னதாகவே பொதுவேலைகளிலும் பொதுப்பிரச்சனைகளிலும் மெல்ல மெல்ல தலையை நுழைக்கிறார்கள். சுற்று வட்டார கிராமங்களில் சமுதாயப் பால் பண்ணை உருவாக்க அடித்தளம் போட்டு வருகிறார்கள், சாதிக்கலவரம் நடக்கும் இடங்களுக்குச் சென்று அமைதிப்பணி செய்கிறார்கள். இளமையில் கண்ட கனவை நனவாக்கி விடவேண்டும் என்பதில் கங்கனம் கட்டிக்கொண்டு செயல்படுகின்றனர். அவர்கள் தொடங்கியுள்ள பயணத்தில் உண்மை தெரிகிறது, உழைப்பு உள்ளது, அர்ப்பணிப்பு இருக்கிறது.

**நீண்ட பயணத்தின் தொடக்கம் நன்றாகவே உள்ளது; முடிவு காலத்தின் கையில் . . .**

**தகவல் : நிஜன்**

படிப்பகம்

www.padippakam.com



# விஷ்ணுபுரம் - ஒரு மதிப்பீடு

- முப்பால்மணி

விஷ்ணுபுரம் ஒரு பெரிய புதினம். அதுவே தன்னைத்தானே எழுதிக்கொண்டு இருப்புக் கண்டுள்ளது. யுகயுகமான காலப்போக்கில் விஷ்ணுபுரமே நிகழ்ந்து கொண்டும் இருக்கிறது. இந்திய வேதாந்திகள் பிரம்மம்/சிவம் என்பது எல்லாமாக ஆகிக்கொண்டிருக்கிறது என்பர். அதற்கு இணையாக, மௌனமான ஒரு முழுமையை ஜெயமோகன் வரித்துக் கொள்ளுகிறார்; இது நவீனத்துவமானது! அந்த முழுமை ஒழுங்கு சிதைந்து தேடலுடன் சுழன்று, விதையென வளர்ந்து முடிவில் மீண்டும் ஆதிக்குத் திரும்புவது இதில் பாவிகமாக உள்ளது. ஹெர்பர்ட் ஸ்பென்சரின் முதன்மைத் தத்துவத்தினோடு ஒப்ப நிற்பது இது. அந்த முழுமையான மௌனத்தில் இந்தப் புதினம் ஒரு சொல் மாத்திரமே. இது இந்திய ஞானத்தின் மையமும் ஆகும். யுகயுகமாக உயிர்த்தெழுந்து அழிந்து மீண்டுமாக இப்படியே! கம்பராமாயணத்திற்கு ஒரு விஷிஸ்டாத்வைதம் போல, மனோன்மணீயத்திற்கு ஒரு பரமாத்துவிதம் போல, இப்படி ஒரு குரலைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. போிலக்கியம் என்னும் சிறப்புக்கும் உட்படுகிறது. இந்தப் புதினம் தமிழ்மொழியில் இருந்தாலும் சமஸ்கிருதம் மற்றும் ஆத்மாவின் மொழியான பாஸந்தி மொழிகளைப் பேசி வாழும் மக்களே சித்தரிக்கப்பட்டுள்ளனர். பிராகிருதம், பைசாசிகம், பாலி மற்றும் தென்மொழி தமிழ் பேசுவோரும் உண்டு.

**ஞானக்கதை** : தென்பாரதக் கேரளப்பகுதியில் அக்னிதத்தன் ஆக்கிவைக்க காஸ்யபன் அதை அழிக்கும் ஆக்கல்-அழிவு வரலாறு பதின்ஏழு தடவை விஷ்ணுபுரமாக நிகழ்ந்திருக்கின்றது. இந்த இப்போதைய புதினத்தில் வருவது 18வது அழிவு. அது கி.பி. 950-1800 (அனேகமாக) வரையான காலவாழ்க்கையுடன் பிரளயத்தில் முடிவதாகக் காட்சி தருகிறது. வேத சமயம், வேதாந்தப் பிரிவு, வைணவ மார்க்கம் வெற்றி பெறுவதாகவும், தாந்தரிக சமயம், வாமமார்க்கம் தோல்வி உறுவதாகவும் நிகழ்ச்சி உள்ளது. இதில் பௌத்த தாந்திரிகம், காலவாதம், வஷ்ராயனம் ஒளி வீசித்திகழ்ந்து பின் அவிந்து புகையான வரலாறும் போிழையாக ஓடுகிறது. பௌத்தஞான நூல்கள் பற்றிய விபரம், அவைகளில் நுண்ணிய பயிற்சி, இந்திய ஞானத்தின் மற்ற பிரிவுகளைக் கற்ற அறிவும் பரந்து புலப்படுகின்றன; ராகுல்ஜியை நினைப்பூட்டுகின்றன.

**அசம்பவம்** : வஜ்ராயன பௌத்த வரலாற்றில் வரும் நரோபாவின் சமகால பௌத்தஞானி அஜிதர், வேதாந்தியான பவதத்தரைவென்று ஞானாதிபர் ஆகிறார்; இது அனேகமான கி.பி. 950-1020, 1270 முதல் மாறவர்மன் சமணரை நீக்கியதாகவும் புதினம் செல்கிறது. 1450களில்

படிப்பகம்

www.padippakam.com



வேதாந்தியான சூரியதத்தர் மகன் ஸ்வேதத்தர் வாமமார்க்கத்திற்கு மாறி ஸ்ரீதத்தர் என ஆனதாகவும் சொல்கிறது! இது முகலாயர் வெற்றி பெற்ற காலமும் ஆகவும் காட்டுகிறது.

தென்னிந்தியாவில் இந்தக் காலகட்டத்தில் வேதாந்தமும், சைவமும் வலிமையுடன் இருந்தன. பவதத்தர் என்ற வேதாந்தி தோல்வி உறுவதும், அப்போது வஜ்ராயன வழியில் அழிந்து கொண்டிருந்த பௌத்தம் வெற்றி பெறுவதும் அசம்பவம்! பவதத்தர் குறைத்துக் காட்டப்பட்டு, அஜிதர் மிகைப்படுத்தப்படுகிறார். இது தன்னிச்சையானது. புதினமாகிய விஷ்ணுபுரத்தின் தன்னறிவு மேம்பாட்டு சுத்த புலப்படுத்தலாகும். இப்படி ஒரு நிகழ்வு ஆந்திராவில் கூட இல்லை! திபெத்திலும் சந்தேகமே! சமணர், களப்பிரர் சமாச்சாரங்களும் அப்போது அசம்பவங்களே; எப்போதோ நடந்தவை சூரியதத்தர் காலத்தில் தாந்திரீக தட்சிணா சாரமும், சூஃபிநெறியும், தத்துவராயர் வழியான பரமாத்துவிதமும், பக்தி வழியான அநுபூதி கூடிய வேதாந்தமும், சித்தர்களும் தோற்றம் பெற்றதும் வரலாறு. அழிவு தந்த முகலாயர் படையெடுப்பாகவும், நிஷாதா சண்டாளருடைய ஞானமற்ற ஆட்சியாகவும் குறைக்க முடியாது.

**ஞானத்தேடல்:** பொருளானது அளவும் பண்பும் கொண்டு புறவயமானது. முடிவின்மை, இயக்கம் உடையது. இப்படிக் கூறும்போது புதினத்தில் சடவஸ்துக்கள் பேசப்படவில்லை! காலம், பிரபஞ்சம், வாழ்க்கை கூறப்படுகின்றன. இதெல்லாம் என்ன, ஏன்? என்று அறியும் ஞானத்தேடல் புதினத்தின் செயலாகவும் உள்ளது. பிரம்மம்/ஆலய விஞ்ஞானம் என்ற புறநிலைப் பண்புகளிலிருந்து தொடங்கி சத், அசத், இன்மை, சூன்யம் என்று முடிவுகள் செய்வது மத்திய கால ஞானவியல்! காலம் - சுழற்சி ஆகியன தொடங்கிய இடத்திலேயே முடிவது அதன் நெறியியலும் கூட! ஒருமித்த சிருஷ்டி முறையியலில் அடங்கும்!

இந்தப் புதினத்தில் ஏது - விளைவு, காரணம் - காரியம் என்பன மேற்கொள்ளப்படவே இல்லை! நிகழ்காலத் தன்மையே முதன்மை மேலிடம் வகிக்கிறது. எல்லாமே நிகழ்காலம்! கூடவே புலன் உணர்வுகள், அனுபவம், அறிவு என்று தொடங்கி நிகழ்வுகள், அடையாளம், குறி என முடியும் நவீனத்துவப் பண்பு ஆட்சியும் பெறுகிறது. அறியாது இருந்தால் அனைத்தும் ஒன்றே, பொருள் என்பது இல்லை, இல்லாத ஒன்றில் கற்பிக்கப்படும் குணங்கள் என்பன அன்றைய வேதாந்தமும், பௌத்தமும் இன்றைய இருத்தலியமும் கைபிணையும் காட்சியாகும். இதனால் நாம் அறிவது அடையாளங்களே, குறிகளே என நவீனத்துவ முடிவைக் கண்டு அனைத்தும் வீண் என்ற உட்பொருளைப் புதினம் தேடி

படிப்பகம்

www.padippakam.com



அடைகிறது. இதனால் இன்றைய புறநிலை பிரம்மவாதம் வைதீகம் ஆகியன ஞானத்தைப் பொருளிலிருந்து வெளியேற்றி அதை அகவயத்திலேயே ஆழ்த்திக் கொண்டுள்ள நவீனவேதாந்தமாக நிலவுவதை இந்தப் புதினம் காட்டுவதோடு, அதற்குச் செறிவான ஆவணமாகவும் திகழ்கிறது.

அகவயப்பிளவு : கலை, தருக்கம், கற்பனை, தியானம், ஆன்மீகம் ஆகியவற்றோடு மானுட உணர்வுகள் கலந்து காணப்பட்டுள்ள பௌராணிகமான மாயஉலகம் விஷ்ணுபுரம்; பொருளாயதமான இந்த உலகத்திலிருந்தே இது ஆக்கப்பட்டுள்ளது! அக்னிதத்தனும், காஸ்யபனும் இம்மண்ணிலிருந்து கொண்டே சமர்புரிந்துகொண்டவர்கள்! ஆனால் அக்னிதத்தன், அவன் வாரிசுகள் சோகம், விரக்தி, அகவயப்பிளவுகளுக்கு ஆட்பட்டுப்போயுள்ளார்கள். அக்னிதத்தன் தந்தையை அழித்தவன். படைப்புகள் அழிவைக் கர்ப்பத்தில் சுமப்பவை! அவன் உட்பட வாரிசுகள் அனைவரும் தன்மானம் தன்னையே தின்னும் குடிலன் அனுபவத்திற்கு இணையானவர்கள். படைப்பாளியான சங்கர்ஷணனும் சிந்தனை முறிவுகளுடன் தனக்குத்தானே எதிருண்டு பிளந்து போனவன். பத்மபுராணம்தான் விஷ்ணுபுரமாகத் தன்னை எழுதிக் கொள்கிறது. விஷ்ணுபுரத்தின் எல்லாக் கற்பனை - வருணனைகளும் இடைமுறிந்த, தனக்குத்தானே எதிராகித் தின்று கொள்பவை. வேதாந்தப் பொலிவை விட உருத்தலிய, நவீனத்துவக்கூர்மை பட்டதாலேயே இந்த விளைவு. புதினத்தின் வக்ரோக்திக்கும் அதிசயோக்திக்கும் இவை துணைநின்றபடி, ஜே.ஜே. சில குறிப்புகளில் வரும் ஜேம்ஸ்ஜோசப் மற்றும் அரவிந்தாட்ச மேனனுடைய கற்பனைகளின் தொடர்ச்சியாகப் பொலிகின்றன. காரணகாரியம் அற்றுப்போய் அன்னியமாகிவிலகிய தருக்கப் பரிசீலனை முறையானது அதருக்கத்தில் முடிகிறது! வைதீகரான யோகவிரதர் அனைத்தும் வீண், அகங்காரம், "தான்" என முடிக்கிறார்! அக்னிதத்தனின் கடைசிவாரிசு வேதத்தின் ஏதுமற்றவனாகப் போகின்றான்; இது இன்றைய விஷ்ணுபுரநிர்மாணிகளின் கதையும் கூட! ஆனால் காஸ்யபன் கண்ட வாமார்க்க வழிவந்த ஸ்ரீநாமர் புறவய சௌந்தர்ய பிரம்மாஸ்மி வழியில், குற்ற உணர்வும், பேத உணர்வும் இல்லாத போகமே பேரானந்த நிலை, இதில் காலத்துயர் இல்லை, காமம் எதிர்ப்பற்ற இருநிலையற்ற நிலையில் யோகமாகிறது, ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு செயலையும் மனதில் எழும் எதிர்விசையுடன் செய்வது இல்லை என்னும் எதிருரைகள் மேல்நிலைக்கு வந்து புன்னகைக்கின்றன. ஒற்றை ஆண்தன்மையில் மேலதிகாரத்துடன் புரியும் தியானம் வெறுமையில் முடிவது ஸ்ரீ நாமருக்கு நகைச்சுவை வஸ்துவாகலாம். இந்நிலையில் ஒருவினா எழுகிறது சார்வாகம் என்பது அர்த்த நிராகரிப்பு தத்துவமல்ல; இதனால் ஒழுக்கம், சட்டம், நீதி, நியாயம், அன்பு, பாசம் அனைத்தும் கட்டி

படிப்பகம்

www.padippakam.com



எழுப்ப முடியாது; அது உளைமண்! அங்ஙனமெனில், இருத்தலியமும், நவீனத்துவமும் பொலிவு கொண்ட விஷ்ணுபுர வேதாந்தத்தால் வெறுமையும், அகவயப்பிளவும் பூண்ட நிலையில் மட்டும் அவை சாத்தியமா? விஷ்ணுபுரத்தைப் பற்றிய வாசிப்பு இந்த வினாவிற்கான விடையைத் தேடிக் கொண்டே உள்ளது! இந்த நிலையில் விஷ்ணுபுரம் பிரளயத்தைக் காட்டுகிறது; பெருமாள் புரண்டுபடுக்கிறார்! புரண்டு படுக்கும் கம்பீரியத்திற்கு அக்னிதத்தன் பரம்பரையினது சமகால அகவயப்பிளவு குறிப்பான குணத்தினை அளிக்கிறது. மல்லாந்த நிலையிலிருந்து புரண்டு படுக்கும் யுகப்பிரளய இயக்கத்தின் அர்த்தம்தான் ஹெகல்தன்னைத் தானே அறிந்து கொள்வது என்றும், விவேகானந்தர் தன்னைத்தானே அனுபவித்துக் கொள்வது என்றும், மனோன்மணீயம் சுந்தரனார் தன்னைத்தானே விளங்குவித்துக் கொள்வது என்றும் பெருவிளக்கம் தந்தனர். இதற்கிணையாக, விஷ்ணுபுரப்பெருமாள் புரண்டுபடுப்பதில் அகவயப்பிளவின் வெறுமையின் புலப்பாடு என்ற பெருஞ்சொல் கிடைக்கிறது! யுகங்கள் மாறுவதற்கு இந்த அர்த்தத்தை உரைக்கும் ஆன்மீகச் சாட்சியமாக விஷ்ணு புரம் பொலிவு கொண்டுள்ளது பெருமாள் புரண்டுபடுத்த போதுதான் இந்தியா காலனி ஆட்சிக்குட்பட்டது

## தமிழர்கொற்றம் - ஒரு மீள்பார்வை

**கணகுறிஞ்சி**

தமிழ் -தமிழகம் - தமிழர்நலன் மேம்படுத்துதல், அறிவியல் மற்றும் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தை வளர்த்தெடுத்தல், மதவெறி சக்திகளை எதிர்த்துப் போராடுதல் - ஆகிய முப்பெரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பெரியார் பிறந்த மண்ணில் - ஈரோட்டில் - செயல்பட்டுவரும் இயக்கம், தமிழர்கொற்றம்!

கடந்த நான்கு ஆண்டுகளாக ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மனிதச்சங்கிலி, பேரணி, கருத்தரங்கு, பொதுக்கூட்டம் ஆகிய பல்வேறு வடிவங்களில், மக்கள் கருத்தைத் திரட்டி வருகிறது இவ்வமைப்பு. ஈரோடு மாவட்டத்திலுள்ள ஈழத்தமிழர் அகதிகள் முகாமின் அவல நிலை பற்றி மாவட்ட ஆட்சியரிடம் நேரில் எடுத்துக்கூறி, தொடர் நடவடிக்கைகட்கு ஏற்பாடு செய்தது.

எந்தவொரு பண்பாட்டு அமைப்பும் மாணவர்நலனில் அக்கறை காட்டாமல், கருத்துப் பரப்புச் செய்வது இயலாத ஒன்று. அந்த அடிப்படையில் பள்ளி/கல்லூரி மாணவர்கட்கிடையே கதை-கவிதை-கட்டுரை-பேச்சு-இசை-ஓவியம் ஆகிய போட்டிகளை மாவட்ட அளவில் நடத்திப் பெரும் பரிசுகளை மாணவ-மாணவிகட்கு வழங்குகிறது. மேற்காண் போட்டிகளின் உள்ளடக்கம், பண்பாட்டுப் புரட்சியை

படிப்பகம்

www.padippakam.com



அடிப்படையாகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சென்ற ஆண்டு வரை பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில், தமிழை ஒரு பாடமொழியாக கூடப் பயிலாமல் மொத்த அதிக மதிப்பெண் வாங்கிய மாணாக்கர்கட்குத் தமிழக அரசின் உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது. அதாவது தமிழுக்கு மாற்றாக இந்தி, சமஸ்கிருதம், ஜெர்மன், பிரெஞ்சு போன்ற ஏதேனுமொரு மொழிப்பாடத்தை எடுத்துப் பயின்று, எளிதில் அதிக மொத்தமதிப்பெண் பெற்று, அரசின் பணப் பயனைத் தட்டிச் சென்றனர். மேல்தட்டு மாணவர்கள் ஒவ்வொரு மாவட்டத்தில் மூன்று மாணவர் வீதம் தமிழகத்தின் 29 மாவட்டங்களிலுள்ள 87 மாணவர்களும், மாநிலத் தகுதி பெற்ற 3 மாணவர்களும் சேர்த்து ஒவ்வொரு ஆண்டும் 90 மாணவர்கள் தமிழைப் படிக்காமலேயே மேற்படிப்புக்கென பல்லாயிரக்கணக்கான ரூபாயைப் பறித்துச் செல்லும் அவலச்சூழல் நிலவியது. +2 படிப்பு முடித்து மருத்துவம், பொறியியல் வேளாண்மை மற்றும் பட்டப் படிப்புகட்குச் செல்லும் இம்மாணவர்களின் படிப்பு முடியும் வரை அதாவது நான்கு ஐந்து ஆண்டுகட்கான செலவு முழுவதையும் தமிழக மக்களின் வரிப் பணத்திலிருந்து அரசு மூலம் உதவித்தொகையாகப் பெறும் கொடுமையை எதிர்த்துத் தமிழர் கொற்றம், தன் எதிர்ப்பு முயற்சிகளைத் தொடங்கியது.

கிராமப்புறத்திலுள்ள ஏழை-எளிய மாணவர்கள், தமிழ் வழியில் பயின்ற மற்றும் தமிழை ஒரு மொழிப் பாடமாகப் பயின்ற மாணவர்கள் இதனால் மிகவும் பாதிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன், தமிழ் ஆட்சிமொழி அமைச்சர் தமிழ்க் குடிமகன் ஆகியோருக்கு விரிவான கடிதங்கள் தமிழர் கொற்றம் சார்பில் எழுதப்பட்டன. அமைச்சர் தமிழ்க்குடிமகனை நேரில் சந்தித்து, இதுபற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

"தினமணி" செய்தியாளர் எம்.பாண்டியராஜன், "நக்கீரன்" செய்தியாளர் ஜீவா தங்கவேல் ஆகியோர் மூலம் இம்முறையை மாற்றக் கோரி கட்டுரைகளும், வேண்டுகோளும் "தினமணி" மற்றும் "நக்கீரன்" மூலம் வெளியிடப்பட்டன.

இவற்றைக் கவனத்தில்கொண்டு, சென்ற ஆண்டு முதல் (1996-97) ஒரு மொழிப்பாடமாகவேனும் தமிழைப் பயின்று அதிக மொத்த மதிப்பெண் பெறும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கட்கு மட்டுமே மேற்படிப்புக்கென அரசுதவி வங்கப்படும் எனத் தமிழக அரசு அறிவித்தது. இதனால் ஆண்டுதோறும் பன்னிரண்டாம் வகுப்பில் சிறப்புத் தேர்ச்சி பெறும் 90 மாணவர்கட்கு அரசுதவி கிடைக்க வழியேற்பட்டுள்ளது. தமிழ் படிக்கும் மாணவர்கட்காகத் தமிழர் கொற்றம் செய்த மிகப்பெரும் தொண்டு இது எனக் குறிப்பிட்டால், அது மிகையாகாது.

தமிழக அரசின் பயங்கரவாத நடவடிக்கை தடைச் சட்டத்தை (பொடா) எதிர்த்து தமிழர் கொற்றம், மக்கள் சிவில் உரிமைக் கழகத்துடன் (பியூசிஎல்) இணைந்து போராட்டம் நடத்தி வருகிறது. இச்சிறப்புச் சட்டத்தின் ஜனநாயக மற்ற தன்மையை விளக்கும் கருத்தரங்கு

படிப்பகம்

www.padippakam.com



அண்மையில் நடத்தப்பட்டு இச்சட்டத்தை அம்பலப்படுத்தும் வெளியீடுகளை மக்களிடையே பரப்பி வருவதோடு, செய்தி ஊடகங்கள் உதவியையும் இதற்காக இவ்வமைப்பு பயன்படுத்தி வருகிறது.

அணுகுண்டு, அணு உலை ஆகியவற்றை எதிர்த்து, ஹிரோஷிமா -நாகசாகி நினைவு நாள் (ஆகஸ்டு 6) தோழமை அமைப்புகளோடு இணைந்து தமிழர் கொற்றத்தால் ஈரோட்டில் ஏற்பாடு செய்யப்பட்டது. "அணுகுண்டு வேண்டாம்; அரிசி வேண்டும்; எனும் முழக்கங்களை மையமாக வைத்து, கவிதை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன; விரிவான கருத்தரங்கமும் நடத்தப்பட்டது. நாற்பதிற்கும் மேற்பட்ட ஓவியங்கள், கருத்தரங்கில் காட்சிக்கு வைக்கப்பட்டன.

ஞானி, தங்கர்பச்சான், அமார்க்ஸ், கோ.கேசவன், க.ப.அறவாணன், சமாதான வெண்புறா கோபால், பாமரன், கு.ச.ஆனந்தன், கு.வெ.கி. ஆசான், ஆனைமுத்து இரவிக்குமார், பொன்னீலன், அருளியார் போன்ற பலரும் தமிழர் கொற்றத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு கருத்தரங்குகளில் கலந்து கொண்டு தத்தம் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் இருபெரும் முயற்சிகளைச் செயற்படுத்த தமிழர் கொற்றம் முனைந்து வருகிறது.

பெரியார் ஈ.வே.ராவின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழக அரசு திரைப்படமாக எடுக்க வேண்டும் என்பது முதல் முயற்சி. இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களிடம் நேரில் வலியுறுத்தப்பட்டுள்ளது. சிவாஜி, சத்யராஜ் ஆகியோர் "பெரியார்" திரைப்படத்தில் இலவசமாக நடிக்கத் தயார் என அறிவித்ததைச் சுட்டிக்காட்டி "தமிழர் கொற்றம்" அரசுடன் தொடர்புகொண்டு வருகிறது.

இரண்டாவது முயற்சி மாணவர் நலன் சார்ந்தது. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த மாணவர்களில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் மொத்த அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்கள் மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கட்கு "பெரியார் விருது" "அண்ணா விருது" வழங்கப்படுவதோடு, அவர்களின் மேற்படிப்புக்கென ரூ. 3,000/- ஆண்டுதோறும் தொடர்ந்து மேற்படிப்பு முடியும் காலம் வரை தமிழக அரசால் வழங்கப்படுகிறது. இம்முறையிலும் தமிழே படிக்காத மாணவர்கள் இன்று வரை அரசின் பணப் பயனைத் துய்த்து வருகின்றனர். அதாவது தமிழ்படிக்காமல் சமஸ்கிருதம் படிக்கும் மாணவனுக்குப் "பெரியார்" விருதும், இந்தி படிக்கும் மாணவனுக்கு அண்ணா விருதும் வழங்கப்படும் அவலநிலை இன்றுவரை தொடர்கிறது. தமிழை ஒரு மொழிப்பாடமாகக் கூடப் பயிலாத மாணவர்கட்குத் தமிழகத்தின் வரிப்பணத்திலிருந்து நிதியுதவி வழங்குவது நிறுத்தப்பட வேண்டும் எனத் தமிழர் கொற்றம் கோருகிறது. இம்முயற்சி, இயக்கமாக விசுவரூபம் எடுக்க வேண்டும்; தமிழ் பயிலும் மாணவர்கள் பயன் பெற வழிவகை செய்ய வேண்டும் என அனைவரையும் தமிழர் கொற்றம் தோழமையுடன் வேண்டுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# பழந்தமிழகம்

(கேரளத்து நூலாசிரியர் **வி.வி.கே. வாலத்து** எழுதிய **"சரித்ர கவாடங்கள்"** என்ற நூலிலிருந்து திரு. இரணியன்)

உண்மையில் நானொரு மலையாளி ஆவேனோ? என் தாய் மொழி மலையாளமாகுமா? மலையதும் அலையதும் மண்ணென்ற நிலைக்கு எனது நாடு மலையாளமாகலாம். மலையாளமென்ற மொழி பிறப்பதற்கு எத்தனை எத்தனையோ நூற்றாண்டுகட்கு முன்பே எனது முன்னோர் இங்கே வாழ்ந்திருந்தனர். அவர்களுக்கு, அவர்களுக்கே யுரிய சொந்த மொழியிருந்தது; இலக்கியம் இருந்தது; பண்பாடு இருந்தது.

கேரளியர்க்கு உரையாடுவதற்கு ஒரு தனிப்பட்ட மொழியும், எழுதுவதற்கு ஒரு தனிப்பட்ட வரி (லிபி)யும் இருந்துள்ளன. அந்தத் தனிப்பட்ட மொழியாய் இருந்தது தமிழ்! அந்த வரிவடிவம் (தமிழ்) வட்டெழுத்தும் ஆகும்.

கேரளத்தினது சொந்தமான மொழி எங்கே? இலக்கியம் எங்கே? பண்பாடெங்கே? சொந்தமென்று கூறத் (தமிழினின்று வேறாக) அதற்கு என்ன உண்டு? **எனது மொழி மலையாளமல்ல; தமிழாகும். எனது நாடு கேரளம் அல்ல. தமிழகமாகும்.**

மலையாளமென்ற புத்தன்னைக்கு இடம் ஒதுக்கிக் கொடுத்துக் கொண்டு கேரளத்தின் தாய்மொழியாகிய தமிழ் பெருமலைத் தொடரில் அப்புறத்திற்குப் பின்வாங்கியது. பெருமலைத் தொடருக்கு இப்புறம் மலையாளம்; அப்புறம் தமிழ். தமிழரோடு பெருமதிப்பு (வெகுமானம்) தோன்றுகிறது. தொன்மைமிக்க தாய்மொழியை அவர்கள் தாம் இன்றும் வாழ்விக்கிறார்கள் (கூடக் கொண்டு நடக்கிறார்கள்) சேர, சோழ, பாண்டியம் என்ற மூன்று நாடுகள் சேர்ந்த தொல் தமிழகம் நூற்றாண்டுகட்கு முன் நடப்பிலிருந்த மெய்ம்மையாகும். சேர நாட்டில் (கேரளத்தில்) வைத்து எழுதப்பட்ட சிலப்பதிகாரம்போலும் உள்ள ஒரு நூலுக்குப் பாண்டிய நாட்டிலும் சோழ நாட்டிலும் மொழிபெயர்ப்புத் தேவைபடவில்லை. எனது கூறு (உறவு, தொடர்பு) தமிழகத்தோடுதான். பழைய செந்தமிழ் இலக்கியங்களில் நான் என் முன்னோரை என் (பழும்பெரு) நாட்டினை காண்கிறேன்.

ஒரே மொழியில், ஒரே பண்பாட்டில் பொலிவுற்று விளங்கிய சேர, சோழ, பாண்டியர் தம் தமிழகக் காலம் வரலாற்றின் ஆழத்தில் மூழ்கி எண்ணற்ற நூற்றாண்டுகளாகி விட்டன. அத்தமிழகம் மீண்டும் வருமோ? மாறிய இயல்பின் ஒரு புதிய பதிப்பாகப் பழந்தமிழகம் மீண்டும் வரவேண்டுமென நான் (உள்ளங்) குமுறுகின்றேன்!

படிப்பகம்

www.padippakam.com



## தமிழ் இயக்கங்கள் : செய்தித்தொகுப்பு

# திருக்குறள் போட்டிகள்

மாணவர்கள் நெஞ்சில் தமிழுணர்வை வளர்க்கும் நோக்கில் கோவையிலுள்ள தமிழ் அறிவியக்கம், திருக்குறள் ஆய்வுக் கழகத்தோடு இணைந்து கோவை வட்டாரத்து மாணவர்களுக்கான போட்டி ஒன்றை 7.11.98 அன்று நடத்தியது. திருக்குறள் மனனம் செய்து எழுதுதல் போட்டியில் 7,8ஆம் வகுப்பு மாணவர்கள் 328 பேர், 9, 10 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் 125 மாணவர்கள் 11,12 ஆம் வகுப்புகளுக்கான பேச்சுப் போட்டியில் 20 மாணவர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் பெரும்பான்மையோர் மாணவிகள். இவ்வளவு பெருந்தொகையில மாணவர்கள் கலந்து கொண்டது பெரும் வியப்பு தருகிறது. மாணவர்களுக்குத் தமிழுணர்வு இருக்கத் தான் செய்கிறது. இவர்களுக்குள் தங்கியுள்ள தமிழுணர்வை வளர்த்தெடுப்பதில் தமிழாசிரியர்களும் தமிழ் ஆர்வலர்களும் பின்தங்கி விட்டனர். பாரத வங்கி அலுவலர் சங்க பள்ளியில் போட்டிகள் நடைபெற்றன. பள்ளி நிர்வாகிகளுக்கும் ஒத்துழைத்த ஆசிரியர்களுக்கும் நன்றி. போட்டிகள் நடத்துவதற்கான முயற்சிகளில் முன்நின்றவர் தமிழ் ஆசான் திரு. அன்வர் பாட்சா அவர்கள். பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெறும். மாணவர்கள் நெஞ்சில் தமிழ் உணர்வை வளர்க்கும் இந்த முயற்சிகளில் பெரியவர்கள், தமிழ் ஆர்வலர்கள் ஒத்துழைக்க வேண்டும். 100/1000 என நன்கொடைகள் தருவதன் மூலம்தான் தமிழை வளர்க்க முடியும். நம் குழந்தைகளுக்காக நாம் இதைச் செய்யத்தான் வேண்டும்.

திராவிடத்தின் வேர்கள் கேரளாவில்/சேரநாட்டில் ஆழப் பதிந்திருப்பதை எடுத்துக்காட்டும் இன்னொரு நிகழ்ச்சி,அண்மையில் வெளியிடப்பட்டுள்ள திருக்குறளின் இன்னொரு மலையாள மொழி பெயர்ப்பு இந்த மொழியாக்கத்தைச் செய்தவர் திரு எஸ் இரமேசன்நாயர் அவர்கள். கேரள மாநிலம் உருவான நவம்பர் முதல் நாளில் திருவனந்த புரத்தில் யானை மீது திருக்குறளை ஏற்றி வந்து விழாவில் நூலை வெளியிட்டிருக்கின்றனர். நூலை வெளியிட்டவர் மன்னர் திரு. மார்த்தாண்ட வர்மா. பேராசிரியர் கோபிநாதப் பிள்ளை நூலை அறிமுகம் செய்து வைத்தார். சிறப்பு விருந்தினர் திருவனந்தபுரம் மேயர். இறுதியில் இசைநிகழ்ச்சி திரு. சங்கரன் நம்பூதிரி. நூலின் விலை ரூ. 350. திருக்குறள் பொதுமறை என்பதில் அய்யமில்லை.

– செய்தி : திரு. இரணியன் அவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



## ● மேலும் சில செய்திகள்

**தமிழ் அறிவியக்கம்** அக்டோபர் திங்கள் சந்திப்பின் போது மறைந்த திரு. சாலை இளந்திரையன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முறையில் பேராசிரியர் கு.வெ.கி.ஆசான், பூவண்ணன், வா.மு.கோ. சேதுராமன் ஆகியோர் உரையாற்றினர். "நானும் என் தமிழும்" என்ற பொருளில் திரு. இரணியன் அவர்கள் உரையாற்றினார். கோவைக்கு வருகை தந்த எழுத்தாளர் பா. செயப்பிரகாசம், பெண் உரிமை இயக்கத்தவர் ஓவியா, வழக்கறிஞர் பொ.வே. பக்தவச்சலம் ஆகியோரோ சந்திப்பு நடைபெற்றது.

**தமிழ்நாடு இலக்கியப் பேரவையில்** தோழர் பொன்னீலன் அவர்களின் "புதிய தரிசனங்கள்" குறித்து புலவர் கோ. ஆறுமுகம் விரிவான உரை நிகழ்த்தினார்.

**சூலூர் பாவேந்தர் பாரதிதாசன் பேரவையின்** 11 ம் ஆண்டு தொடக்க விழாவின் போது மரியாதைக்குரிய மு. இராமநாதன் அவர்கள் தன் "நெஞ்சில் நின்றவர்கள்" குறித்து 3½ மணிநேரம் பேருரை யாற்றினார்.

## ● தமிழ் வளர்க்கும் தாய்த்தமிழ் பள்ளிகள்

தமிழகத்தில் நடைபெறும் தாய்த்தமிழ் பள்ளி ஒன்றில் ஓர் இரண்டு மணிநேரம் உங்களால் கழிக்கமுடியுமானால் நாங்கள் உறுதியாகச் சொல்லமுடியும் உங்கள் வயதில் 5 ஆண்டுகளாவது குறையும். கொஞ்சும் தமிழில் குழந்தைகள் உங்களோடு இனிக்க இனிக்கத் தமிழில் பேசுகிறார்கள். ஆசிரியரை அத்தை என்றும் மாமா என்றும் அண்ணா என்றும் அழைக்கிறார்கள். விளையாட்டின் போதே கற்கிறார்கள். தூய்மையாக இருக்கிறார்கள். சேர்ந்து உண்ணுகிறார்கள். திருவள்ளுவரும் பாரதியும் பாரதிதாசனும் இவர்கள் நாவிலும் நெஞ்சிலும் திளைக்கிறார்கள். தமிழ் நமக்கு அமுதம் என்று பாரதிதாசன் கூறியதை இங்கு நீங்கள் உணரமுடியும் உயிரைத் தளிர்க்க வைக்கும் தமிழுக்கு உடனடியாக ஏதாவது செய்யவேண்டும் என்று நீங்கள் முந்துவீர்கள்.

கோபி செட்டிபாளையத்திலிருக்கும் தாய்த்தமிழ் பள்ளிக்குச் சென்ற மாதத்தில் ஒரு நாள் நண்பர்கள் சென்றோம். கார் என்றும் பஸ் என்றும் எத்தனையோ ஆங்கிலச் சொற்களோடு பழகிவிட்ட நமக்கு இந்த குழந்தைகள் மூலம் ஓர் அதிர்ச்சி தரும் இன்பம் காத்திருந்தது. நமக்கு பழக்கமாகி விட்ட 100க்கும் மேற்பட்ட பொருட்களின் ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை இவர்கள் அறிந்திருப்பதோடு நம்மைத் திருத்தவும் செய்கிறார்கள். இவர்களின் பழகு தமிழில் பயின்று வரும் இன்ப தமிழ்ச் சொற்களில் ஒரு பகுதியை கீழே தருகிறோம். சிலவற்றின் ஆங்கில சொற்கள் அடைப்புகளில் நமக்காக!

படிப்பகம்

www.padippakam.com



இருக்கை, ஏடு, தூவல் (Pen) கரிக்கோல் (Rule Pencil) சீருடை, மேசை/மிசை, குவளை, நிலைப்பேழை (Beureau) நீர்க்குடுவை (Watercane) திறவுகோல், குளம்பி, பழச்சாறு, பனிக்குழைவு (Ice Cream) ஈரெட்டி (Biscuit) மெது ரொட்டி (Cake) மிதியடி, தொய்வை/அழிப்பான் (Rubber) ஒலிப்பேழை (Tape Recorder) சரக்குந்து (Lorry) வண்ணத்தூவல் (Sketch Pen) தானியங்கி (Auto-rikshaw) அடுமனை (Bakery) வணிகம், சாலை, வீதி, விசை (Switch) சீருந்து (Bike) திரைஅரங்கு, அணிமணிகள், குளிர்பதனப்பெட்டி, உருள்முனைத்தூவல் (Bal Point Pen) திருகுவான் உர்தி (Helicapter) குழல்விளக்கு, அச்சகம், நகலகம், வண்ணப்பூச்சு (Paint) மருந்தகம்.

● தமிழின் ஆக்கத்திறன்களை வளர்க்கும் ஆய்வுகளை நாம் பெரிதும் வரவேற்கிறோம். தமிழ் அறிவியக்கத்தோடு நெருக்கமான உறவு கொண்ட நண்பர் இராம. திருநாவுக்கரசு அவர்கள் சுந்தரராமசாமி அவர்களின் சிறுகதை குறித்து முனைவர் பட்டத்திற்கான ஆய்வை முடித்துள்ளார். இதன் தொடர்பான நேர்முகத் தேர்வு 31.10.98 அன்று நடைபெற்றது. காந்தி கிராமம் தமிழ்த் துறையைச் சார்ந்த பேராசிரியர் முனைவர் பத்மநாபன் அவர்கள் நேர்முகத் தேர்வை நெறிப்படுத்தினார். சுந்தர ராமசாமி அவர்களின் பிற்கால சிறுகதைகளில் பெரும்பாலானவை சிக்கலானவை. இருண்மை நிறைந்தவை. அதே சமயம் கலைத்திறன் மிக்கவை. மனித விடுதலையை முன்நிறுத்துபவை. குறியீட்டு பாங்குமிக்க இந்தச் சிறுகதைகள் குறித்த சிறப்பான ஆய்வை முன் வைத்திருக்கிறார் என்ற முறையில் நண்பர் அரசு நம் பாராட்டுக்குரியவர்.

## ● மணமக்களுக்கு நம் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்

கோவையில் 1.11.98 அன்று நடைபெற்ற நண்பர் இரவிராசன் மணிமேகலை ஆகியோரின் திருமணம் இங்கு பல காரணங்களுக்காக குறிப்பிடத்தக்கது. திருமணத்தில் தாலி இல்லை. சடங்குகள் இல்லை. மணமக்கள் புத்துடைகள் அணியவில்லை. ஒரு சமூக நிகழ்வு என்ற முறையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கான பொறுப்புகளை இயக்கங்களும் நண்பர்களும் ஏற்றுச் செய்ததும் குறிப்பிடத்தக்கது. இவை எல்லாவற்றையும் விட இன்னொரு செய்தி நம்கு வியப்பு தருகிறது மணமகனின் தந்தை பெரியவர் சி.எம். மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டபடி கடந்த மூன்று தலைமுறைகளாக இவர்கள் குடும்பத்தில் சாதிகளும் இனங்களும் மொழிகளும் தொடர்ந்து சங்கமமாகி வருகின்றன. திருமணத்தை நடத்தி வைத்தவர் சமாதான வெண்புறாவின் ஆசிரியர் கோபாலன். கு.வெ.கி. ஆசான், பி. பக்தவச்சலம், ஓவியா முதலியோர் வாழ்த்தினர். கோவையில் உள்ள தமிழ் அமைப்புகளைத் திரட்டுவதிலும், தமிழ்த் தேசியம் பசுமை இயக்கம் ஆகியவற்றை மாணவர்கள் மற்றும் மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்வதிலும் அயராத ஊக்கம் கொண்டவர் தோழர் இரவிராசன் அவர்கள். நண்பர் இரவிராசன் இல்லையென்றால் இவ்வகை செயல்பாடுகள் இல்லை என்று சொல்லுமளவிற்கு அவரது செயல்பாடுகள் அமைந்துள்ளன.

படிப்பகம்

www.padippakam.com

# வரப்பெற்றோம் – நன்றி

1. நொய்யலாற்றங் கரையினிலே (நாவல்), ஆசிரியர் : சூர்யகாந்தன் தமிழர் பண்பாடு சமூக ஆய்வு மையம், 10/2, நால்வர் நகர், பாரதியார் பல்கலைக்கழக அஞ்சல், கோவை - 641 046 பக்கங்கள் 324 விலை ரூ. 70/-

2. அடைப்புகள் (நாவல்), ஆசிரியர் : செ. கணேசலிங்கன் பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை - 600 108.

3. விடுதலை வீரன் தீரன் சின்னமலை, வரலாறு (மேடைநாடகம்) முனைவர் கா. அரங்கசாமி, அறிவரசு பதிப்பகம், 450, தமிழ் நகர், கோபி - 638 452.

4. பெருங்கவிக்கோ போ.மு. சேதுராமன் புத்தகங்கள்
   i. வைகறை வரும் (கவிதைகள்) விலை ரூ. 30/-
   ii. எழுதுகோலே உனக்கு ஓர் எச்சரிக்கை (கவிதைகள்) விலை ரூ. 25/-
   iii. நெஞ்சத் தோட்டம் (கவிதைகள்), விலை ரூ. 36/-
   தமிழ்மணி புத்தகப் பண்ணை, 281, காயிதே மில்லத் நெடுஞ்சாலை, சென்னை - 600 108.

5. பனி பெய்யும் பகல் (கவிதைகள்), ஆசிரியர் : தமிழன்பன் பூம்புகார் பதிப்பகம், 63, பிராட்வே, சென்னை - 600 108. விலை ரூ. 37.50

6. நடை மறந்த நதியும், திசைமாறிய ஓடையும் (கவிதைகள்) ஆசிரியர் : தமிழன்பன், பூம்புகார் பதிப்பகம் விலை ரூ. 50/-

7. வெ. சாமிநாத சர்மா, ஆசிரியர் : பெ.சு. மணி சாகித்ய அகாடமி வெளியீடு, விலை ரூ.25/-

## நூல் அறிமுகம்

### தமிழ் வழிபாட்டு முறைமை

### தமிழரின் சமய, பண்பாட்டு, அடிப்படை உரிமை

(சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தன் வழக்குரைஞர், கோபி)
விலை : ரூ. 6.00 விஜயா பதிப்பகம், இராசவீதி, கோவை 641 001

## நூல் மறுவெளியீடு

நூல் : ஆங்கிலம் வெற்றிவாகை சூட்டிய வரலாறு
ஆங்கில மூலம் : ஆர்.எவ். ஜோன்ஸ், தமிழில் : ஏ.ஜே. கனகரத்தினா
நாள் : 15.11.98 காலை 10.00 மணி இடம் : ரூபி ஆங்கிலப் பள்ளி, கணபதி
ஆய்வுரை : தமிழன்னல், சிற்பி, பொன்னீலன்

## தமிழ் ஆட்சி மொழி

(கருத்தரங்க கட்டுரைகள்)

22 கட்டுரைகள். பக்கங்கள் 332. (விலை குறிப்பிடப்படவில்லை)
வெளியீடு : புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.
19, சின்ன சுப்பராயப்பிள்ளை தெரு, புதுச்சேரி - 605 001.

படிப்பகம்

www.padippakam.com

நிகழ் : தமிழ்நேயம் (தனிச்சுற்றுக்கு மட்டும்) நன்கொடை ரூ 5/-

# உன்னை மகிழ்விப்பதைவிட ...

என்னை கவிதை எழுதச்சொல்லாதே
பலமுறை முதல்வரி எழுதியபிறகு
அதை மறந்திருக்கிறேன்.

மறந்தது என்பதைவிட நான்
என்னை அறிந்திருக்கிறேன் என்பதே உண்மை.
இனி என்னால் கவிதை எழுதமுடியாது.

கவிதை எழுதத்துவங்கிய காலங்களில்
நட்சத்திரங்களை, பூக்களை,
பட்டாம்பூச்சிகளைப் பற்றி
இனிமையான கனவுகளைப்பற்றி
எழுதியிருக்கிறேன்.

வளர்வதற்கிடையில் எங்கேயோ
என் கவிதையின் அலைகள்
அமைதியாய் அடங்கி
பனியாய் உறைந்திருக்கின்றன.

அதன் மேல் கறுப்பு பூட்சுகள்
குதித்தோடியிருக்கிறது.

வெடிச்சத்தம் அதன் சுவாசத்தின்
சுதந்திரத்தைக் கூட
பறிந்திருக்கின்றன.

அதன் அருமை பச்சிலைகளின் மேலல்லாம்
சிவப்பு இரத்தத் துளிகள்
பதிந்திருக்கின்றன.

ஈழமண் குழிகளுக்குள்ளே
ஈழ பேராளிகளின்
கடைசி மூச்சின் ஒலிகள் கேட்டுக் கேட்டு
என் பேனாவைக்கூட மறந்து
ஆயுதமாக்கியுள்ளது.

உன்னை மகிழ்விப்பதைவிட
அதன் கனவை
சுதந்திரப் படுத்துவதே எனது நோக்கம்
என்னைக் கவிதை எழுதச் சொல்லாதே ...

– வாமனன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்

கி. பழனிச்சாமி (ஞானி)
123, காளீஸ்வரர் நகர், கோயமுத்தூர் 641 009

அச்சாக்கம் :
ஜி.எம்.சிஸ்டம்ஸ், 10வது வீதி, காந்திபுரம், கோயமுத்தூர்

படிப்பகம்